பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 18 திங்கட்கிழமை 04.12.2023 கதிர் 388

### 10 முன்னணி வர்த்தகர்களால்

# அரச வங்கிகளிடம் பெறப்பட்ட கடன் ரூ. 8 ஆயிரம் கோடி மீளளிப்பில்லை

### ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு

**இலங்கையின் 10 முன்னணி வர்த்தகர்கள் அரச வங்கிகளிடம் பெற்ற 8000 கோடி ரூபாய் கடனைத் திருப்பிச் செலுத்த வில்லை என்று இலங்கை வங்கி ஊழியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

**அந்தப் 10 வர்த்தகர்களின் பெயர்களையும் ஆளும் தரப்பினர் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்றும் இல்லையேல் தாம் வெளிப்படுத்தும் நிலை வரும் என்றும் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ரஞ்சன் சேனாநாயக்க** ☞ 2

## இது ரகசியம் அல்ல!

பொலஸ் மா அதிபர் நியமனம் குறித்தசர்ச்சைகள்இன்னும்ஓய்வுக்கு வரவில்லை. எதிர்பார்க்கப்பட்டது போலவேபதில்பொலிஸ்மாஅதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமித்ததற்கு பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித்திடமிருந்து கடும் எதிர்ப்பு வெளிப்பட்டது. சர்ச்சைக் குரிய இந்த நியமனம் மேலும் எதிர்ப்புக்களையும் கண்டனங்களையும் எழுப்பும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனைச் சமாளிப்பதற்கு ஆளும் தரப்பு புதிய வியூகத்தை வகுப்பதாகத் தகவல்கள் கசிய விடப்பட்டுள்ளன. பொலிஸ் மா அதிபரைக் கட்டுப்படுத்தும் விதமாக பொலிஸ்மா ஆணையாளர் நாயகம் என்றபுதியபதவியைஜனாதிபதி ☞ 2

## மின் கட்டணத்தை உடன் குறைத்தேயாக வேண்டும்

### ஜனக ரத்நாயக்க தெரிவிப்பு

தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டுமின்சாரகட்டணத்தை உடனடியாக குறைக்க வேண்டும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின்முன்னாள்தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்த ஆண்டு 720 பில்லியன் ரூபா செலவாகும் என்ற கணிப்பு தவறு. இவ்வருடத்தின் செலவு 575 பில்லியன் ரூபாய் ☞ 2

### மாவீரர் நாள் நிகழ்வுகளுக்காக தண்டனை கோரி

## டிசெம்பர் 7 வீதி மறியல் போராட்டம் திடீர் மாணவர் அமைப்பு அறிவிப்பு

### கிளிநொச்சி வளாகத்தில் இந்த நிலமை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் மாவீரர் தின நிகழ்வுகளில் பங்கேற்ற மாணவர்களையும் அதற்குஅனுமதிவழங்கிய பீடாதிபதிகளையும் தண்டிக்கவலியுறுத்திதிடீரென முளைத்த கிளிநொச்சி வளாக மாணவர் ஒன்றியம் என்ற அநாமதேய அமைப்பு எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை ஏ9 வீதியை மறித்துக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கான முன்னறிவித்தல் இன்றிரவு கிளிநொச்சி வளாகத்தினுள் அடங்கும் சகலபீடங்களினது பீடாதிபதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 26 தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளையும், மறுநாள் 27 ஆம் திகதி அந்த அமைப்பிலிருந்து உயிர்நீத்தவர்களின் நினைவு தினத்தையும் கடைப்பிடித்தமை கிளிநொச்சி வளாகத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவதோடு இன முரண்பாடுகளை தோற்றுவிக்கும் என சிங்கள மாணவர்கள் சிலரின்பெயரில்டிசெம்பர் 1, வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு அநாமதேயமாக முறைப்பாடு அனுப்பப்பட்டிருந்தது.

இத்தகைய அநமாதேய முறைப்பாடுகள் பல வெவ்வேறு பெயர்களில் அனுப்பப்பட்டதன் பின்னணியில் கிளிநொச்சி வளாக விரிவுரையாளர் ☞ 8

## அலெக்ஸின் இறப்புக்கு நீதி கேட்டு வட்டுக்கோட்டையில் போராட்டம்





வட்டுக்கோட்டை பொலிஸாரால் தாக்கப்பட்டதில்சிறுநீரகப் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்தார் என்று கூறப்படும்இளைஞனின் இறப்புக்கு நீதி கேட்டு வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையம் முன்பாக நேற்றுக் கண்டனப் போராட்டம் இடம்பெற்றது

போராட்டத்தையொட்டி வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸார்குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

தமிழ் தேசிய ☞ 2

## காங்கேசன்துறையில் பெருமளவு இராணுவ புல்லட் புரூவ் அங்கிகள்

### கிணற்றிலிருந்து மீட்பு



காங்கேசன்துறை - மாங்கொல்லை பகுதியில் தனியார் காணியிலிருந்த கிணறு ஒன்றில் வீசப்பட்டிருந்த பெருமாளான இராணுவ புல்லட் புரூவ் அங்கிகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

கடந்த 33 வருடங்களுக்கு மேலாக இராணுவ கட்டுப்பாட்டில் இருந்து அண் ☞ 2

## நாடாளுமன்றையோ நீதிமன்றையோ ரணில் விக்கிரமசிங்க மதிப்பதில்லை

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

மக்கள்ஆணையற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தையோநீதிமன்றத்தையோ மதிப்பதில்லை. அரசமைப்பு பேரவைக்கும்அழுத்தம் பிரயோகிக்கின்றார். இடைக்கால ஜனாதிபதியொருவர் இவ்வாறு தன்னிச்சையாக செயற்பட அதிகாரம் இல்லை.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது ஐக்கிய மக்கள் சக்தி.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அந்தக்கட்சியின் முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தார். அவர் அங்கு மேலும்தெரிவித்ததாவது:

எதிர்கால திட்டமிடல் அற்ற வரவு - செலவு திட்டமே முன்வைக்கப்பட்டுள்ளது. ஜனவரிமுதல்மேலும்சில வரிகளை அதிகரிப்பதே ஆளும் தரப்பின் நோக்கமாகவுள்ளது. அவை வரவு - செலவு திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. ஒருபுறம்அரசஉத்தியோகத்தர் களுக்கான வாழ்வாதாரக் கொடுப்பனவைவழங்குவதாகக் கூறிக்கொண்டு,மறுபுறம் வற் வரியை 18 ☞ 2

## அதிவலு மின்சாரம் தாக்கியதில் இரு கொம்பன் யானைகள் சாவு

### புத்தளம் அருகே சோகம்





புத்தளத்தில் மின்சார வேலியால் தாக்கப்பட்ட இரு கொம்பன் யானைகள் உயிரிழந்துள்ளன. கருவலகஸ்வெவ தேவனுவர என்ற பகுதியில் இறந்த நிலையில் இந்த இருயானைகளின் சடலங்களும் ☞ 8

### காலநிலை மாற்ற விடயத்தில்

## இலங்கைக்கு மேலும் உதவ பில்கேட்ஸ் உறுதியளிப்பு

காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதில் இலங்கைக்கு மேலும் ஆதரவளிப்பதாக பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்பின் (BMGF) இணைத்தலைவர் பில் கேட்ஸ்(Bill Gates) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உறுதியளித்தார் என்று ஆளும் தரப்புத் தெரிவித்துள்ளது.

துபாயில்நடைபெறும் கோப் 29 (COP 28) மாநாட்டுக்குஇணையாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ்ஸூம்அமைப்பின் (BMGF) இணைத் தலைவர் பில்கேட்ஸூம் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

காலநிலை மாற்றத்தைக் குறைக்கும் உலகளாவிய சவால் குறித்தும் வெப்பவலயப் பிராந்தியத்தில் இலங்கையின் பங்களிப்பை மேம்படுத்துவது குறித்தும் இங்கு விரிவாகக் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

உருவாக்கஇருக்கிறார்என்றுஅந்தத் தகவல்களில் கூறப்பட்டுள்ளது. அந்தப்பதவியில்முன்னாள்பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவை அமர்த்துவதும் ரணிலின் திட்டம் என்று சொல்லப்பட்டுள்ளது.

சூழ்நிலைக் கைதியாகி இருக்கும் ரணில், விரும்பம் இல்லாவிட்டாலும்கூட தேசபந்து தென்னக்கோனை பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார். இதனைத் தடுப்பதற்காக 6 மாதங்களாக விக்ரமரத்னவிற்கு மீண்டும் மீண்டும் 4 தடவைகள் சேவை நீடிப்பு வழங்கி வந்தார். கடைசியில் அழுத்தங்களுக்கு அடிபணிந்து பதில் பொலிஸ் மா அதிபர்பதவியைவிக்கிரமரத்னவுக்கு வழங்கினார்.

இப்போது,பொலிஸ்ஆணையாளர் நாயகம்பதவிமூலம்முழுபொலிஸ் திணைக்களத்தின் நிர்வாகத்தை மேற்பார்வையிடும் பொறுப்பை விக்ரமரத்னவிடம் ஒப்படைக்க அவர் காய் நகர்த்தி வருகின்றார் என்றுசொல்லப்படுகின்றது. அதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று, தென்னக்கோன் முன்னாள் ஆட்சியாளர்களான ராஜபக் ஷக்களின் விசுவாசி என்கிற சந்தேகம் இருப்பதுதான்.

பொலிஸ் ஆணையாளர் நாயகம் பதவிக்கு மேலதிகமாக பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், அதாவது டிரான் அலஸின் அமைச்சு செயலாளராகவும் முன்னாள் பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் யோசனையையும் ரணில் கொண்டிருக்கிறார் என்று கூறப்படுகின்றது. ஜனாதிபதி செயலகத்தால் இந்த யோசனைஅமைச்சருக்குஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த ஆண்டில் தேர்தல்கள் வரவுள்ள நிலையில் சட்டம் ஒழுங்கு தனது கையை மீறிப் போய்விடக்கூடாதுஎன்பதில்ரணில் அக்கறையோடுஇருக்கிறார்என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

........................

போர்க் காலங்களைவிட இப்போதுதான்இலங்கைப்படைகளை விட்டோடுவோர் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. முப்படைகளில் இருந்தும் கடந்த பத்துமாதங்களில்மட்டும்15ஆயிரம் படையினர் தப்பிச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது. 140 அதிகாரிகள் உட்பட 15,360 பேர் தப்பியோடியுள்ளனர். இதில் இராணுவத்தின் 99 அதிகாரிகளும், கடற்படையின் 26 அதிகாரிகளும் விமானப்படையின்15அதிகாரிகளும் அடங்குகின்றனர்.

படைகளில் இருந்து இவர்கள் தப்பியோடுவது மட்டுமே இங்கு பிரச்சினையல்ல. இவர்களில் பலர் பாதாள உலகக் குழுக்களுடன் இணைந்து செயற்படுகின்றனர் என்று சொல்லப்படுகின்றது. முழுமையான ஆயுதப் பயிற்சிகளைப் பெற்ற இவர்களை பாதாள உலகக் குழுவினர் ஒப்பந்தக் கொலையாளிகளாகப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தெற்கில் பாதாள உலகக் குழுவினரிடையேதுப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்திருப்பதற்கு படைகளைவிட்டுத் தப்பியோடியோரும் ஒரு காரணம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

படைகளைவிட்டுத் தப்பியோடியோர்முறைப்படிவிலகுவதற்காகப் பொதுமன்னிப்புவழங்கப்படுவதைத் தவிர, அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எவையும் ஆளும் தரப்பால் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதை சமூக ஆர்வலர்கள் கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## அரச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டுபிரதானஅரசவங்கிகளான இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும்நாட்டிலுள்ளவிவசாயிகள் முதல் கொழும்பில் உள்ள பெரும் வர்த்தகர்கள் வரை கடன் வழங்கியுள்ளன. கடனை மீள செலுத்துவது கடன் பெற்றவர்களின் பொறுப்பாகும்.

இந்த இரண்டு வங்கிகளிலும் கடன் பெற்றுள்ள பத்து முன்னணி வர்த்தக வாடிக்கையாளர்கள் மிகச் சிறப்பாகத்தொழில்செய்து அரசியல் பாதுகாப்புடன் பெருமளவு லாபம் சம்பாதித்து வருகின்றனர். குறித்த 10 பேர் மாத்திரம் இலங்கை வங்கிக்கு 5 ஆயிரம் கோடி ரூபாய்களும், மக்கள் வங்கிக்கு 3 ஆயிரம் கோடி ரூபாயும் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது.

முடியுமாயின் இந்த 10 பேரின் பெயர்களை பாராளுமன்றத்தில் வெளிப்படுத்துங்கள்.இல்லையெனில் நாட்டின் பொது நலனுக்காக நாம் வெளிப்படுத்துவோம். அதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

இதனிடையே, இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் 20% பங்குகளைதனியாருக்குவிற்பனை செய்வதற்கு ஆளும் தரப்புத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## மின் கட்டணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமே.

ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 50 ரூபாவை செலுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட கட்டண அதிகரிப்பு காரணமாக சபைக்குப் பெரும் இலாபம் கிடைத்துள்ளது. இந்நிலையில் இவ்வருடத்தின் கடந்த 11 மாதங்களில் மின்சார சபையின் செலவு 540 பில்லியன் ரூபாய்களாகும்.

இதனுடன் இந்த மாதம் மேலும் 38பில்லியன்ரூபாய்சேர்க்கப்படும். மேலும் , மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும்போது தனது மதிப்பீட்டில் கவனம் செலுத்தியிருந்தால் மக்களும் பொருளாதாரமும் தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்பிற்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காங்கேசன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையில் விடுவிக்கப்பட்ட பகுதியில், காணி ஒன்றினை அதன் உரிமையாளர் துப்பரவு செய்து, கிணற்றினை இறைத்தபோது அதனுள் வீசப்பட்டிருந்த இந்த அங்கிகள் மீட்கப்பட்டன.

அது தொடர்பில் இராணுவத்தினருக்கு அறிவித்ததை அடுத்து தாம் அவற்றை அப்புறப் படுத்துவார்கள்என்றுகூறியுள்ளனர்.

அதனால் அவரது காணிக்குள் அந்த இராணுவ அங்கிகள் அனைத்தும் குவிக்கப்பட்டுள்ளன.

போரில் ஈடுபடும் இராணுவத்தினர், தமது உயிரை பாதுகாத்துக் கொள்வதற்காகஅணிந்துகொள்ளும் ஒருவகை கவச அங்கிகளே இவை என்று கூறப்படுகின்றது.

## நாடாளுமன்றையோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சதவீதமாக அதிகரித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உலகம் சுற்றிக் கொண்டிருக்கும்போது, நாட்டில் நாளுக்கு நாள் பிரச்சினைகள் அதிகரித்துச் செல்கின்றன. அரசமைப்புப் பேரவை சார் செயற்பாடுகளில் சபாநாயகர் பக்கச் சார்பாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். நாடாளுமன்றத்தில்கூட நியாயம் நிலைநாட்டப்படாதபோது, நாட்டில் எவ்வாறு மக்களுக்கு நியாயம் வழங்கப்படும்?

ஜனாதிபதியும், அவரது சகாக்களும்நாடாளுமன்றத்தையோ சட்டத்துறையையோமதிப்பதில்லை. விக்கிரமசிங்க - ராஜபக்ஷ ஆட்சி மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையைஏற்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பானவழக்குவிசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும்நிலையில், அடுத்தவருடம்ஜனாதிபதித்தேர்தலும் பொதுத் தேர்தலும் இடம்பெறும் என்று ஜனாதிபதி அறிவிக்கின்றார். ஜனாதிபதி பதவிக்கு அப்பால் தேர்தல்ஆணையாளராகவும்அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். தேர்தல் தொடர்பில் அறிவிக்கும் உரிமை ஜனாதிபதிக்கு கிடையாது என்றார்.

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடப்பட்டது என்று ஆளும் தரப்புத் தெரிவித்தது.

இலங்கையில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது தொடர்பான வேலைத்திட்டங்களுக்கு பில் மற்றும்மெலிண்டாகேட்ஸ்அமைப்பு ஏற்கனவே தமது பங்களிப்பினை வழங்கி வருவதாகவும், எதிர் காலத்தில் இந்த ஒத்துழைப்பு மேலும் விரிவுபடுத்தப்படும் எனவும் பில் கேட்ஸ் இந்தச் சந்தர்ப்பத்தில் உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் மற்றும் விவசாயத்துக்கான தரவுக் கட்டமைப்பை நிறுவுவதற்கான முயற்சிகள் குறித்தும் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளன.

அத்துடன், டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியில் இலங்கையுடன் ஒத்துழைப்பை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் பில் கேட்ஸ்குறிப்பிட்டார்எனவும்தெரிவிக்கப்படுகிறது

காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கான கூட்டுஅர்ப்பணிப்பின்அவசியத்தை வலியுறுத்தும்வகையில்ஸீநூஊண28 மாநாட்டில் இலங்கை முன்வைத்த முன்மொழிவுகள்குறித்துஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பில்கேட்ஸிடம் தெளிவுபடுத்தியதுடன், உலகுக்கே சவாலாக மாறியுள்ள சுற்றாடல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சர்வதேச முயற்சிகளில் பயனுள்ள பங்கை வகிக்க இலங்கை தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் சுற்றாடல் அமைச்சர் கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்ல, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அலெக்ஸின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டைச்சந்தியில் பிற்பகல் 3 மணியளவில் போராட்டம் தொடங்கியது. சிறிது நேரத்திலேயே



பொலிஸார் நீதிமன்ற தடையுத்தரவு ஒன்றைக் கொண்டுவந்து போராட்டக்காரர்களுக்கு வாசித்துக்காட்ட முற்பட்டனர். போராட்டகாரர்கள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கவே பொலிஸார் பின்வாங்கினர்.

உயிரிழந்தவர் சித்தன்கேணி, வட்டுக்கோட்டையைச்சேர்ந்தவரான நாகராசா அலெக்ஸ் (வயது 26). திருட்டுக் குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். சிறையிலிருந்தபோது சுகவீனமுற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார்.

திருட்டுவழக்குஒன்றுதொடர்பாக அலெக்ஸும் மற்றொருவரும் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்றும் ஆனால் 4 நாள்களாகியும் அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப் படவுமில்லை, வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையக் காவலிலும் இல்லை என்றதை அடுத்து தாம் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிட்டனர் என்றும் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டதை அடுத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். விளக்கமறியலுக்காக, யாழ்ப்பாணம் சிறைச்சாலையில்தடுத்துவைக்கப்பட்டிருந்த சமயமே அலெக்ஸ் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். ஞாயிற்றுக்கிழமை அங்கு அவர் உயிரிழந்தார்.

தான் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த நாள்களில் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும்போது அலெக்ஸ் தெரிவித்தார் என்று கூறப்படும் காணொலி ஒன்று சமூக ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து அலெக்ஸின் உயிரிழப்புக்கு வட்டுக்கோட்டைப் பொலிஸாரே காரணம் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

அந்தக் காணொலியில் தனது கைகள் இரண்டையும் பின்புறமாகக் கட்டிவிட்டு உயரத் தூக்கித் தாக்கினார்கள் என்றும் பெற்றோல் ஊற்றிய பொலித்தீன் பையால் முகத்தைமூடிசித்திரவதை செய்தார்கள் என்றும் முகத்தை மூடிக்கட்டிவிட்டு தண்ணீர் ஊற்றித் தாக்கினார்கள் என்றும் அலெக்ஸ் கூறும் காட்சிகள் உள்ளன என்று கூறப்படுகின்றது.

தாக்கப்பட்ட பின்னர் தனக்குச்சாராயம்தந்தார்கள்என்றும்தாக்கியது குறித்து வெளியே சொல்லக்கூடாது என்று மிரட்டினார்கள் என்றும் தாக்கப்பட்டதற்குப் பின்னர் தன்னால் சாப்பிட முடியவில்லை என்றும்கூட அந்தக் காணொலியில் அலெக்ஸ் கூறியிருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அலெக்ஸின் உடற்கூறாய்வு அறிக்கையில்அவர்தாக்கப்பட்டதால் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்என்றுகூறியதை அடுத்தும், அலெகஸுடன் கைது செய்யப்பட்ட மற்றொருவர் தங்கள் இருவரையும் பொலிஸார் கடுமையாகத் தாக்கினர் என்று சாட்சியமளித்ததன் பேரிலும் யாழ்ப்பாணம் நீதிமன்றம் சந்தேகநபர்களான 5 பொலிஸாரையும் கைது செய்யுமாறு உத்தரவிட்டது. அதன்படி நால்வர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

உயிரிழந்த அலெக்ஸுக்கு நீதி கேட்டே நேற்றைய போராட்டம் இடம்பெற்றது. அலெக்ஸ் அப்பாவி, வட்டுக்கோட்டைபொலிஸ்குற்றவாளி, காவல்துறையா காவாலித்துறையா என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

போராட்ட நிறைவுபெறும் தறுவாயில் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸார் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாட முன்வந்தபோதும் அதனை மறுத்துப் போராட்டகாரர்கள் கலைந்து சென்றனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளையும் பாதுகாப்பவர்களையும் மக்கள் நன்கறிவார்கள்

## காவிந்த ஜயவர்தன கூறுகிறார்



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது, தமது உறவுகள் ஏன் கொல்லப்பட்டார்கள் என்று பாதிக்கப்பட்ட எம் மக்கள் இன்றும் கேள்வி எழுப்புகிறார்கள். ஆனால், தீர்வு கிடைக்கவில்லை. நான்கரை ஆண்டுகளுக்குப் பின்னர் குண்டுத்தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது, யாருக்காக நடத்தப்பட்டது என்பதையும், தற்போது அவர்களைப் பாதுகாப்பவர்களையும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நாட்டில் சட்டம் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் ஒருசிலர் சட்டத்தில் இருந்து விடுபடுகிறார்கள். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டு நான்கரை ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை நீதி கிடைக்கவில்லை. உண்மை பகிரங்கப்படுத்தப்படவில்லை. எவரும் தண்டிக்கப்படவுமில்லை.

2019 ஆம் ஆண்டு அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை முன்னிலைப்படுத்தியே ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்தவுடன் குற்றவாளிகளைத் தண்டிப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டது. ஆனால் இன்று வரை அந்த வாக்குறுதிகள் பொய்யாக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பயங்கரவாதி சஹ்ரான் உட்பட அவனது தரப்பினர்கள் முதல் குற்றவாளிகளாகவும், குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் போதுமான அளவு புலனாய்வு தகவல் கிடைத்தும் உரிய நடவடிக்கை எடுக்காத அரச மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் இரண்டாம் தர குற்றவாளிகளாகவும், முதல் குற்றவாளிகளையும், இரண்டாம் தர குற்றவாளிகளையும் பாதுகாக்கும் தரப்பினர் மூன்றாம் தர குற்றவாளிகள் எனவும் இந்த குண்டுத்தாக்குதலில் குற்றவாளிகளை அடையாளப்படுத்தலாம்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது, தமது உறவுகள் ஏன் கொல்லப்பட்டார்கள் என்று பாதிக்கப்பட்ட எம் மக்கள் இன்றும் கேள்வி எழுப்புகிறார்கள். ஆனால், தீர்வு கிடைக்கவில்லை. குண்டுத்தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது, யாருக்காக நடத்தப்பட்டது என்பதையும், தற்போது அவர்களை பாதுகாப்பவர்களையும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உட்பட தேசிய கத்தோலிக்க பேராயர்கள் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்கள். அந்தக் கடிதத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தக் கடிதத்தை சபைக்கு சமர்ப்பிக்கிறேன்.

குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை அவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

விசாரணைகளை முன்னெடுக்குமாறு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தரப்பினருக்கு பதவி உயர்வு வழங்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் பாதிக்கப்பட்டுள்ள எம் சமூகத்தினருக்கு எவ்வாறு நீதி கிடைக்கும். - என்றார்.

(05)

# 2,403 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் கடந்த 9 மாதங்களில் மாத்திரம் பதிவு

## நீதி அமைச்சர் விஜயதாஸ கவலை



நிறைவடைந்த 09 மாத காலப்பகுதிகளில் மாத்திரம் நாடளாவிய ரீதியில் 2403 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலைமை கவலைக்குரியது என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது, நீதிமன்ற வழக்குகள் பற்றிய தரவுகள் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

நாட்டின் நீதிக் கட்டமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் ஒருசில விடயங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் தான் முதற்கட்ட நிதி கிடைக்கப்பெற்றது. ஜி.எஸ்.பி. வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கும் கடந்த காலங்களில் நீதிக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

நீதியமைச்சின் கீழ் 21 நிறுவனங்கள் உள்ளன. நீதிமன்ற கட்டமைப்பில் உயர் நீதிமன்றம் முதல் தொழில் நீதிமன்றம் வரையிலான நீதிமன்ற நடவடிக்கைகளில் 11,4458 வழக்குகள் நிலுவையில் உள்ளன. உயர்நீதிமன்றத்தில் 17 நீதியரசர்கள் உள்ளார்கள். ஒரு நீதியரசருக்கு 334 வழக்குகள் என்ற அடிப்படையில் வழக்கு விசாரணைகள் வழங்கப்படுகின்றன. அதே போல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 20 நீதியரசர்கள் உள்ளார்கள். அவர்களில் ஒருவருக்கு 202 என்ற வழக்குகள் என்ற அடிப்படையில் வழக்குகள் வழங்கப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் பெருமளவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மனித மற்றும் பௌதீக வள பற்றாக்குறைக்கு மத்தியில் தான் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. நிலுவையில் உள்ள வழக்குகளை நிறைவு செய்வதற்கு தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நிறைவடைந்த 09 மாத காலப்பகுதிகளில் மாத்திரம் நாடளாவிய ரீதியில் 2403 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிலைமை கவலைக்குரியது. இந்த வழக்குகளில் 1167 வழக்குகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பதற்கு புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - என்றார். (05)

# பொலிஸ் உத்தியோகத்தரை கத்தியால் குத்தி போத்தலால் தாக்கியவர்களில் இருவர் கைது

மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் மோட்டார் சைக்கிளை விட்டு தப்பிச்செல்ல முற்பட்டபோது, அவர்களைத் துரத்திச்சென்ற பொலிஸ் உத்தியோகத்தரை குறித்த மூன்று பேரும் கத்தியால் குத்தி போத்தலால் தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

அவ்வேளை மூன்று சந்தேக நபர்களில் இருவர் பிரதேசவாசிகளின் உதவியுடன் வெள்ளவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரது கையில் மூன்று கத்திக்குத்து காயங்கள் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச்சென்ற மற்றொரு சந்தேக நபரைக் கைது செய்யும் நடவடிக்கை தொடர்பிலான விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# காலமெலாம் நாவலரை கருத்தினில் இருத்துவோம்



நாவலர் பெருமான் நமக்கு நல்வரமாவார்
காரிருள் களைந்திடப் பேரொளி ஆகினார்
சைவத்தைத் தமிழினை தன்னுயிர் என்றார்
சைவரின் தமிழரின் தளர்வினைத் தகர்த்தார்

பண்பாடு கலாசாரம் பறிபோகும் காலமது
பலபேரின் மனமெல்லாம் நிலைமாறும் காலமது
பயத்தோடு பலபேர்கள் பற்றினார் புறச்சமயம்
பிறந்தாரே நாவலர் பெருநோயைப் போக்குதற்கு

சம்பந்தர் அப்பர் சன்மார்க்கம் காத்திட்டார்
சந்ததும் சைவமதை தானெண்ணி வாழ்ந்திட்டார்
வேதநெறி சைவநெறி தளைத்தோங்கச் செய்திட்டார்
நாவலரும் அவ்வழியில் நடந்துவிட விளைந்திட்டார்

சமணமும் பௌத்தமும் சைவத்தைத் தடுத்தது
சம்பந்தர் அப்பர் சமயத்தில் வந்தார்கள்
சைவத்தின் காவலராய் எழுந்திட்டார் இருவருமே
புறச்சமயம் நிலையிழந்து புறமொதுங்கிப் போயிற்று

அடியார்க ளுதமதனில் அரனுணர்வை அமர்த்திடவே
அப்பரொடு சம்பந்தர் அயராது உழைத்தார்கள்
தித்திக்கத் தித்திக்கச் செப்பினார் திருமுறையை
அத்தனையும் அடியார்க்கு அருங்கமாய் ஆகியதே

பாடினார் பாடினார் பல்வாறு பாடினார்
பண்ணோடு பாடினார் பரமனைப் பாடினார்
பக்தியை பரப்புதற்குப் பக்குவமாய்ப் பாடினார்
பலருமே பின்னாலே தமைமறந்தே ஏகினார்

சைவமும் தமிழும் தானங்கே எழுந்தது
சம்பந்தர் அப்பர் தளபதியாய் விளங்கினர்
அடியார்கள் கூட்டம் ஆலயத்தைச் சூழ்ந்தது
ஆன்ம்மீக மங்கே ஆர்ப்பரித் தெழுந்தது

இவையனைத்தும் நாவலரின் எண்ணத்தில் பதிந்தது
சிவனடியை மனமெண்ணி சிரங்கொண்டார் பலபணிகள்
பிரசங்க மெனுமுறையை கையெடுத்தார் நாவலரும்
பெருமைமிகு தத்துவங்கள் பெருக்கெடுத்து நின்றனவே

பக்திக்கு வித்திட்ட முன்னோரின் பாதையினை
உத்தமராம் நாவலரும் உறுதியாய் பற்றினரே
வற்றாத பக்தியினை வசனத்தில் விளக்கிடவே
புத்தொளியாய் நாவலரும் பறப்பட்டு வந்தாரே

செய்யுளாய் இருந்தவற்றை சிறப்பான வசனத்தில்
நல்லைநகர் பிறந்தமகன் நயமாகப் படைத்திட்டார்
எல்லையில்லாப் பரம்பொருளை எம்சமய உண்மைகளை
எடுத்துரைக்கும் பாங்கினிலே எழுதிட்டார் பலநூல்கள்

சமயநிறை கல்வியினை தானவரும் தேர்ந்தெடுத்தார்
சகலருமே கல்வியினை கற்றிடவே வழிசமைத்தார்
கல்வியது வாழ்வில் கசடகற்றும் எனவுரைத்தார்
கல்வியினைக் கண்ணாகப் போற்றினார் நாவலரும்

ஆதீனம் அத்தனையும் அவர்வழியை வியந்தது
அவருரையை ஆதீனம் வரவேற்று நின்றது
ஆறுமுகம் ஆற்றலினால் நாவலராய் ஆகினார்
ஆதீனம் நாவலரை அரவனைத்து நின்றது

நாவலரின் வரவாலே நற்றமிழும் சிறந்தது
நம்சைவம் பண்பாடு நலனோடு எழுந்தது
காவலராய் நாவலரும் கண்ணாக இருந்திட்டார்
காலமெலாம் நாவலரைக் கருத்தினில் இருத்துவோம்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# திருமலையில் ஐஸ் போதையுடன் பொலிஸ் சார்ஜட்டின் மகன் கைது

திருகோணமலை - கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞரொருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் திருகோணமலை பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக குறித்த இளைஞரை பைசல்நகர் பிரதான வீதியில் வைத்து சோதனையிட்ட போது, அவரிடமிருந்து 05 கிரேம் 400 மில்லிகிரேம் ஐஸ் போதைபொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து, கைது செய்யப்பட்ட நபர் கிண்ணியா - மாஞ்சோலை வீதியில் வசித்து வருபவர் எனவும், ஹதரஸ்கொடுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் பொலிஸ் சார்ஜன்ட்டின் 24 வயதுடைய மகன் எனவும் தெரியவருகிறது.

இவர், ஏற்கனவே ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்யும்போது குறித்த இடத்தில் இருந்து தப்பி ஓடியவர் என்பதும் பொலிஸ் ஆரம்பக் கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. இதனையடுத்து, கைதான நபரை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ள நிலையில், விசாரணைகளின் பின்னர், திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பிளாஸ்ரிக்கை முதலில் கட்டுப்படுத்துவோம்

துபாயில் நடந்துவரும் காலநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா. மாநாட்டில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பெரும் குழு ஒன்று இலங்கையில் இருந்து பங்கேற்றிருக்கும் நிலையில், இலங்கையின் சுற்றுச்சூழலுக்குப் பெரும் பாதகத்தை விளைவிக்கும் பிளாஸ்ரிக் பாவனை குறித்த எச்சரிக்கைகள் வெளிவந்துள்ளன.

நாளொன்றுக்கு சராசரியாக 938 மெற்றிக் தொன் பிளாஸ்டிக் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற நிலையில், அவற்றில் 4 வீதம் மாத்திரமே மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுகிறது என்கிற அபாயகரமான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படாத பிளாஸ்டிக், கழிவுப்பொருளாக சூழலில் விடுவிக்கப்படுகிறது. இது பேராபத்தை விளைவிக்கும் என்பது நிச்சயம்.

உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்ரிக்கில் 32 சதவீதம் மாத்திரமே மீள சேகரிக்கப்படுகிறது. என்றாலும் அவை அனைத்தும்கூட மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படுவதில்லை என்பது சுற்றுச்சூழல் விடயத்தில் ஆளும் தரப்புக் கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகின்றது. தற்போதைய பொருளாதார நிலையில் சுற்றுச் சூழல் விவகாரத்தை அந்நியச் செலாவணியை ஈட்டும் பசுமைப் பொருளாதாரமாகப் பார்ப்பதைத் தாண்டி அரசுத் தலைவரும் ஆளும் தரப்பினரும் உண்மையான அக்கறையோடு செயற்படுகின்றார்களா என்கிற அச்சத்தை, சந்தேகத்தை இது ஏற்படுத்துகின்றது.

எதிர்காலத்தில் பிளாஸ்டிக் இறக்குமதிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும்போது தொழில்துறையின் தேவைக்கேற்ற, அத்தியாவசயிமானவற்றுக்கு மட்டும் அனுமதி வழங்குமாறு சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு, மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்தது.

சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, அதன் தலைவர் அஜித் மான்னப்பெரும தலைமையில் நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் கூடியபோதே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

வருடாந்தம் இலங்கைக்கு 4 இலட்சம் மெற்றிக் தொன் பிளாஸ்டிக் மூலப்பொருள்கள் இறக்குமதி செய்யப்படும் நிலையில், வருடாந்தம் 20,000 மெற்றிக் தொன் கழிவுப் பிளாஸ்டிக்கை இறக்குமதி செய்வதற்கும் அனுமதி வழங்கப்படுகின்றது. வரவிருக்கும் பேராபத்தை உணராமல் இவையெல்லாம் செய்யப்படுகின்றனவோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

கடந்த வருடத்தில் 20,000 மெற்றிக் தொன் கழிவுப் பிளாஸ்டிக்கை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதும், யார் செய்த புண்ணியமோ தொழில்துறையினால் 5,179 மெற்றிக் தொன் கழிவுப் பிளாஸ்டிக்மாத்திரமேஇறக்குமதிசெய்யப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் சராசரியாக நாளொன்றுக்கு 938 மெற்றிக் தொன் பிளாஸ்டிக் நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாகவும், இதில் 32 வீதம் மாத்திரமே மீள சேகரிக்கப்படுவதாகவும், இவ்வாறு சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக்கில் 4 வீதம் மாத்திரமே இயந்திரங்களின் ஊடாக மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படுவதாகவும் இங்கு தெரியவந்துள்ளது.

உத்தேசசுற்றாடல்சட்டமூலவரைபைவிரைவில்நிறைவு செய்து,அதனைநடைமுறைப்படுத்துவதற்கானபணிகளை துரிதப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

பொலித்தீன்மற்றும்பிளாஸ்ரிக்கின்பயன்பாட்டைத்தடை செய்வதற்கானமுன்மொழிவுகள்,நடவடிக்கைகள்ஆளும் தரப்புக்களால் இலங்கையில் அறிவிக்கப்பட்டபோதும் இதுவரையில் அதற்கான தீவிர நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

கொடூர அரக்கனான பிளாஸ்ரிக்கை முதலில் ஒழிப்பதற்கும் கட்டுப்படுத்துவதுற்கும் நடவடிக்கை எடுப்பதில் ஆளும் தரப்பு அக்கறை எடுக்கவேண்டும். பசுமைப் பொருளாதாரத்தின் மீது காட்டும் தீவிரத்தை பிளாஸ்ரிக் பாவனையைக் கட்டுப்படுத்துவதன் மீதும் ஆளுரம் தரப்பினர் செலுத்தவேண்டும்.

# நல்வழியில் நடை பயின்றார் நல்லைநகர் நாவலர் பெருமான்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.



நல்லைநகர் என்றாலே எல்லையில்லா இன்பம் வரும். வல் வினைகள் போக்குகின்ற வடிவேலன் உறை யும் இடம். அந்தவிடம் அமைந்த விதம் அனைத்துக்கும் பெருமைதான். சொல்ல வல்ல ஒருவர் பிறக்கின்றார். அவர் பெயருடன் நல்லை நகரும் இணைந்து விடுகிறது. நல்லை நகர் சேர்ந்ததனால் அவர் புகழ் பெற் றாரா அல்லது அந்தக் கந்தப் பெருமான் அருள் கிடைத்ததால் அவர் புகழ் பெற் றாரா என்று எண்ணி நிற்கும் அள வுக்கு அவர் சிறந்தோங்கி விளங்கினார். அப்படி விளங்கியவர்தான் நல்லைநகர் ஆறுமுக நாவலர் பெருமான்.

கந்தப் பெருமானைத் தன் சிந்தையில் இருத்தி - தன் வாழ்க்கைப் பாதையினை அவர் அமைத்து அதன் வழியில் நடந்தார் எனலாம். கந்தப் பெருமானைமனம்முழுக்களண்ணிய இருந்த காரணத்தால் கந்த புராணத்தை உயிராக நாவலர் பெருமான்கருதினார். கந்தபுராண கலாசாரம் என்னும் வகையில் ஒரு புதுமையான கலாசாரம் தோன்றி இன்றளவும் ஈழத்தில் யாழ்மண்ணில் இருப்பதற்கு மூலகாரணமாய் நாவலர் பெருமானே அமைந்தார் என்பதை அனைவரும் அகத்தில் இருத்துவது அவசியமாகும்.

நாவலர் பெருமானை ஐந்தாங்குரவர்என்றுஏற்றிப்போற்றும் ஒரு நிலையும் காணப்படுகிறது. சமய குர வர் என்னும் பொழுது சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் வந்து அமைகிறார்கள். யாவருக்கும் இது தெரிந்த விடயந்தான். ஆனால் ஐந்தாம் நிலையில் ஒருவரை இவர்களுடன் எப்படி இணைப்பது ? எவ்வாறு இப்படி ஒரு சிந்தனை எழுந்தது?என்றெல்லாம்எண்ண வைக்கிறதல்லவா ! இங்குதான் நாவலர் தேர்ந் தெடுத்து நடந்த பாதையினைப்பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.சமய குரவர்கள் என்ன செய்தார்கள்? அவர்களைக் கோவிலில்களில் வைத்துஅவர்களுக்குக்குருபூசை செய்வதற்குக் காரணந்தான் என்ன? பூசிக்கப்படுகிறார்கள், கொண்டாடப்படுகிறார்கள் , உயர் நிலையில் வைக்கப்படுகிறார்கள் என்றால் அவர்கள் நிச்சயம் சமூதாயத்துக்கு மிகவும் உவப்பான, அவசியமான, செயல்களைச் செய்திருப்பவர்களாகத்தான் இருப்பார்கள் என்பது புலனாகி நிற்கிறதல்லவா !

சமயகுரவர்களில் முன்னிற்பவர்சம்பந்தப்பெருமான். அவரின் சம காலத்தவர் அப்பர் பெருமான். இவர் கள் இருவரும் எங்கள் இன் தமிழை இதயத்தில் வைத்து ஏந்தினார்கள். அது போல் சைவத்தையும் இதயத் தில் இருத்தி வைத்தார்கள். சைவம் ஒரு கண்ணாயும் தமிழ் மற் றக் கண்ணாயும் இவர்கள் கொண்டார்கள் என்றால் அது மிகையாகாது.மாற்று மதமும் , வேற்றுக் கலாசாரமும், தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும், சைவத்தையும், அடக்கி ஒடுக்கி அழிக்கின்ற வகையிலே வந்த பொழுது -அவற்றை அகற்றிட நாமார்க்கும் குடியல்லோம் என்னும் துணிவுடன் வந்தவர்கள்தான் சம்பந்தரும் அப்பரும். சம்பந்தர் இளைய வர். அப்பர் முதிர்ந்தவர். இளமையும் அனுபவமும் இணைந்து ஒரு பெரிய போராட்டமே தமிழகத்தில் நடந்தது. அந்தப் போராட்டாத்தின் முதல் படைத் தளபதிகளாய் ஆண் டவனைத் துணையாக்கி நின்றவர் கள்தான் சம்பந்தரும் அப்பரும் ஆவர்.

எதனை ஏற்பது ? எதனை விடுவது ? எது பயனானது ? என்று மயக்குற்று நின்ற மக்களுக்குத் தலைமை தாங்கி அவர்களை நல்வழியில் நடத்திச் சென்றவர்கள் சம்பந்தரும் அப்பருமே என்பதை மறுத்துரைத்து விடல் இயலாது.சம்பந்தரும் அப்பரும் அக்காலத்தில் பிறந்திருக்காவிட்டால் எங்கள் சைவமும், தமிழுமே காணாமலே போயிருக்கும். செய்யெனச் சொல்லாமல் தாமே முன்னின்று செயலாக்கி நின்றார்கள். கோவில்கள் எழுந்தன. சைவம் தளைத்தது, பிழைத்தது. அவர்களின் பின்னால் சுந்தரர் வருகிறார். மணிவாசகர் வருகிறார். இவர்களும் தங்காலத்துக்கு எது ஏற்றதோ அதனைச் செவ்வனவே செய்து சைவத்தையும் , தமிழையும் நிலைபெற வைக்கிறார்கள்.

சமய குரவர்கள் நால்வரின் பின் ஐந்தாம் குரவராக நாவலரைக் கொள்வதற்கு உரிய காரணங்களை அறிவது மிகவும் அவசியமாகும். அதற்கு நாவலர் பெருமானைப் பற்றித் தெரிந்து கொள்ளுவது முக்கிய மாகும்.

சைவத்தைத் தலைமேற் கொண்ட குடும்பம் நாவலர் பெருமான்குடும்பம். ஆசார அனுட்டானங்களைக் கடைப்பிடித்த குடும்பம் எம் பெருமானை நீள நினைந்த குடும்பம். சைவம் , தமிழ் இரண்டையும் கண்ணாய்க் கருதிய குடும்பம் அவர் குடும்பம். அந்தக் குடும்பத்தில் பிறந்ததே திருவருள் என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது. பிறப்பும், குடும்பச்சூழலும்வளரும் பருவத்திலேயே நாவலரை நல்ல வழியில்பயணப்படுவதற்கு உரிய கருவை இதயத்தில்பதித்துவிட்டது என்று தான் சொல்ல வேண்டும். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தமிழ் இலக்கியங்களை, இலக்கணத்தை , சைவத்தை எல்லாம் கற்றிட நாவலரின் தந்தையார் உறுதுணையாகவிளங்கினானர். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பது போல-நாவலரின் இளமையில் போடப்பட்ட நல்ல உரமானது அவரின் வருங்கால வாழ்வினுக்கு, செயற்பாடுகளுக்கு நற்பாதையாய் அமைந்திருந்தது என்பது உண்மையாகும்.

நாவலர் அவர்கள் வாழ்ந்த காலம் அன்னியர் ஆட்சியின் காலமாகும். அவர்களின் மதம், கலாசாராம், மொழி செல்வாக்கினைச் செலுத்துவதற்கு முன்வந்த காலமாகும். அன்னியரை அடிபணிந்தால் அனைத்துமே கிடைக்கும் என்னும் நிலை காணப்பட்ட காலமுமாகும்.அன்னிய அரசுக்கு யார் விசுவாசமாகச் செய ற்படுகிறார்களோ அவர்களே நல்ல வசதிகளை, வாய்ப்புகளைப்பெற்று வாழும் வாழ்க்கை நிலவியது என்பதும் மனங்கொள்ளத்தக்கது. இந்தச்சூழலில் நாவலர் பெருமான் ஆங்கிலப் பாடாசாலையில் கல்வி கற்கவேண்டி ஏற்படுகிறது. தற்பொழுது யாழ் மத்திய கல்லூரியாய் விளங்கும் கல்லூரியில் தான் நாவலரின் ஆங்கிலக் கல்வி தொடங்கியது. நாவலர் எதையுமே நினையாமல்கற்பதைக்கருத்தாய் எண்ணிக் கற்று யாவரும் மதிக்கும் மாணவனாய் நிமிர்ந்து நின்றார். அன்னிய மொழியான ஆங்கிலத்தில் நல்ல புலமையினையும் பெற்றுக் கொண்டார். கற்ற பாடசாலையிலேயே கற்பிக்கும் ஆசானாக ஆகும் வாய்ப்பும் அவருக்கு வாய்த்தது.ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் என்று கற்று தன்னுடைய மொழி ஆற்றலை நாவலர் பெருமான் வளர்த்துக் கொண்டார். கிறீத்தவ பாடசாலை. கிறீத்தவ பாதிரிமார் ஆசிரியர். கிறீத்தவமே அங்கு முழுவதுமாய் இருந்தது. ஆனால் அவை எவையுமே தன்னைத் தொடாதவாறு நாவலர் தம்மைக் காத்து சிறந்த சைவமகனாய் ஆகியே நின்றார். இப்படி அமைந்ததற்கு அடிப்படை காரணம் நாவலர் மனதில் உதித்த நற்பாதை என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது.

சமய குரவர்கள் வரவில்லையேல் எங்கள் சைவம் இல்லாமலே போயிருக்கும். சமயகுரவர்களின் வருகை அக்காலத்துக்கு அவசிய மானதாகவே அமைந்தது.ஐந்தாம் குரவராய் போற்றப்படும்நாவலர் வந்திருக்காவிட்டால் எங்கள் சைவமும் இல்லாமல் போயிருக்கும். அன்னியர் ஆளுகையினால் அவர்களின் மதமான கிறீத்தவம் மேலோங்கும் நிலை காணப்பட்டது. அந்த மேலோங்கலால் எங்கள் சைவம் தன்னிலை இழந்து போகாமல் - நிலைபெறச் செய்தவர் நாவலர் பெருமானே ஆவர்.இதனால் ஐந்தாம் குரவராய் சைவத்தைக் காத்திடநாவலர்அன்னியர்ஆட்சிக் காலத்தில் வந்து அமைகிறார் என்பதுதான் உண்மையாகும்.

சைவமும் தமிழும் இணை பிரியாதன. சமயகுரவர்கள் தமிழையே மூச்சாக்கி அதன் வாயிலாகவே சைவ த்தின் மேன்மைகளை உணார்ந்திடச் செய்தார்கள். அத்தனையும் திருமுறைகளாக மலர்ந்தன.பண்ணமை ந்ததமி ழ்ப் பாடல்களாய் மக்கள் மனங்களில் பதிந்து மாற்றத்தை ஏற்படுத்தின. இவையனைத்தும் நாவலர் பெருமான் உள்ளத்தில் நிறைந்தே இருந்தது. சமயகுரவர் காலத்தில் பாடல்கள் மூலமாகவே கருத்துக்களை வெளிப்படுத்துவது வழமையாய் இருந்தது. ஆனால் நாவலர் காலம் அதற்கு உவப்பானதாக இருக் கவி ல்லை. அதனை நன்கு மனதிற் கொண்ட காரணத்தால் புதுப்பாதைவகுத்துஅதன்வழியில் நாவலர் பெரு மான் நடக்கத் தொடங்கினார். அந்தப்பாதைதான் வசனநடையாகும்.சைவத்தின்மேன்மைகளை மக்கள் மனத்தில் பதியவைக்க நாவலரின் சிறப்பான வசனநடை கைகொடுத்தது மட்டுமல்லாமல் வெற்றியினையும் அளித்தது எனலாம்.அவர் தமிழில்வசனத்தைக்கையாண்ட விதத்தைக் கண்ட பரிதிமாற் கலைஞரான தமிழறிஞர் அவரை வசனநடை கைவந்த வல்லாளர் என்று வியந்து போற்றினர்.

கோவில்கள் தோறும் அடியார்கள் பின் தொடர சமய குரவர்கள் திருமுறைகளைப் பாடினார்கள். அது அக்காலத் தேவையாய் ஆகியது. ஆனால் நாவலர் தன்காலத்துக்கு எது ஏற்றதோ அதனைக் கையிலெடுத்து - கோவில்களில் தொடர் விரிவுரைகளை அறிமுகமாக்கி நின்றார். நாவலரைத்தான் முதல் மேடைப் பேச் சாளர் என்றும் கொள்ளலாம்.

(5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# நல்வழியில் நடை பயின்றார்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

தற்போதைய மேடைப் பேச்சுக்கு வித்திட்டவராகவும் நாவலர் பெருமான் வந்தமைகிறார் என்பது கருத்திருத்த வேண்டியதேயாகும். சைவசமயக் கருத்துக்களைப் புலப்படுத்த புராண ங்களைக் கையிலெடுக்கிறார் நாவலர் பெருமான். புராணங்களை விரிவுரையாக மக்களுக்கு எடுத்து விள க்குகிறார். அவரின் சொல்லாற்றலும் , பேச்சாற்றலும் மக்களை அவர் வசமாக்கி நிற்கிறது. அவர் எடுத்த முயற்சி வெற்றியாய் அமைகிறது. பேச்சுடன் நின்றுவிடாமல் மிகவும் எளிமையான் வசன நடையில் புரா ணங்களுக்கு விளக்கங்கள் எழுதி அவற்றை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கிறார். அச்சுக்கூடத்தை நிறுவி அதில் சைவ , தமிழ் நூல்களைப் பதிப்பித்து ஒரு புரட்சியினையே செய்து விடுகிறார்.இது அவர் தேர்ந்தெடுத்த நல்ல பாதையாய் அமைகிறது எனலாம்.

இலவசமாய் கல்வியினை அளிக்கும் புதுப்பாதையினைநாவலர்பெருமான்தொடங்கி வைக்கிறார். படிக்கும் மாணவர்களுக்கான பாட நூல்களைத் தாமே எழுதி அவற்றை அச்சடித்தும் கொடுக்கின்றார். மாணவர்களின் கல்வி உளவியலை மனதிற் கொண்டு நாவலர் பெருமானின் பாடநூல்கள் அமைந்திருந்தன என்பதுதான் மிகவும் முக்கியமாகும்.தமிழகத்தில் தமிழ்ப்பாட நூல்கள் அக்காலத்தில் வந்தாலும் - அவையெல்லாவற்றையும் விட நாவலர் பெருமானின் பாடநூல்களேசிறந்தது என்றுதமிழ்நாட்டவராலேயே ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். இலக்கியத்தை , இலக்க ணத்தை, இலகுவாக்கிடும் வகையில் நாவலரின் செயற்பாடுகள் அமைந்திருந்தன என்பதை மறுத்துரை த்து விடல் முடியாது. செய்யுளாய் அமைந்திருந்த இலக்கணத்தை யாவரும் விளங்கும் வகையில் அவர் காலத்தில் வசனநடையில் கொண்டுவந்து கொடுத்தமை நாவலரின் புதுப்பாதைதானே !

ஐந்தாம் குரவராக விளங்கும் நாவலர் அஞ்ஞா நெஞ்சனாகவும் விளங்கியிருக்கிறார். தம்மை எதிர்கொ ள்ள வந்த அரசின் ஆணையினையே துச்சமாக எண்ணி நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்று வீரமாய் எதிர்து நின்றவர் சமயகுரவரான அப்பர் பெருமான். அப்பர் வழியிலே நமது ஐந்தாம் குரவரும் நடை பயில்கிறார் என்று தான் சொல்ல வேண்டும்.தன் கருத்துக்கு ஒவ்வாதவற்றை , நீதிக்குப் பாதிப்பானவற்றை , சமூகத்துக்குப் பொருந்தாவற்றை, சைவத்தைத் தூஷிப்பவற்றை : அஞ்ஞாமல் எதிர்க்கின்ற போராளியாக அதாவது கண்டனக்கதாநாயகனாக நாவலர் பெருமான் விளங்கினார் என்பது உண்மை யாகும். சைவத்தைத் தாழ்த்தியவர்களை எதிர்த்தார். வால்பிடிப்பாரை எதிர்த்தார். உண்மையினை உண ராமல் ஊதுகுழலாய் ஆகி நிற்பாரை எதிர்த்தார். போலிச் சைவர்களை, போலிக் கிறீத்தவர்களை, எதிர்த் தார். அதுமட்டுமல்ல சமயம் அறியாத குருமாரையும் சாடினார். கண்டனங்களை சிறு துண்டுப் பிர சுரமாக வெளியிட்டார். அத்தனையும் அவரின் தர்ம ஆவேசத்தையே வெளிச்சமாக்கி நின்றது.கண்டனக் கணை களை வீறுடன் விடுபவராய் ஐந்தாம் குரவரான நாவலர் பெருமான் இருந்தார் என்பதை யாவருமே ஒத்துக் கொள்ளுவார்கள்.

குருவினைப் பேணுவதில் பெரும் அக்கறை மிக்கவர் நாவலர் பெருமான். குரு சொல்லினைத் தட்டாமல் விவிலியத்தை மொழி பெயர்த்துக் கொடுத்து - மிகச்சிறந்த மொழி பெயர்ப்பு என்னும் அங்கீகாரத்தையும் வாங்கிக் கொடுத்தார். அத்துடன் அவர் நின்றுவிடுகிறார். விவிலியத்தை மொழிபெயர்க்கும் வகையில் அவர் அந்தக் கிறீத்தவ வேத நூலினை மனத்தில் நன்கு பதித் தவராகவே ஆகியிருக்கிறார். அதனால் சைவ த்தை எதிர்க்கும் கிறீத்தவ பிரசாரகருக்கு ஏற்ற மறுமொழியினை அளித்திடும் அறிவாற்றல் நாவலர் பெரு மானிடம் நிரம்பியே இருக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. தனது சமயத்தையும் , மற்றைச்சமயத்தையும் நன்றாய் அறிந்து உணர்ந்த காரணத்தால் நாவலர் பெருமான் தன் காலத்தில் கதாநாயகனாகவே ஆகி நின்றார் என்பதை மறுத்துரைத்துவிடல் முடியாது அல்லவா !

ஆறுமுகம் என்னும் பெயருடன் தமிழகம் சென்றவர் யாழ்ப்பாணம் திரும்பிடும் வேளை நாவலர் என்னும் பட்டத்தினைத் தனதாக்கி ஆறுமுக நாவலர் என்னும் புதுப் பெயருடன் வருகிறார்.நாவன்மையினை மெச்சி திருவாவடுதுறை ஆதீனம் இப்பட்டத்தை ஈழத்துத் தமிழ்ப் பெரியாரான ஆறுமுகத்துக்கு வழங்கியிருக்கிறது.பட்டம் என்னவோ அவருடன் இணைந்து கொண்டுவிட்டது.அது அவருக்கு மிகவும் பொருத்தமான பட்டமாகவும் அமைந்தது என்பதும் உண்மையாகும்.ஆனால் நாவலர் பெருமான் அதனால் தன்னிலையில் மாற்றமுறவில்லை. தன்பாதை எதுவோ அதன்வழியிலேதான் பயணப்பட்டார்.அவர் விரும்பி இரு ந்தால் ஏதாவது ஒரு ஆதீனத்துக்குக் தலைவராய் ஆகி இருக்கலாம்.ஆளணியுடன் வாழ்ந்திருக்கலாம்.அப் படியான எண்ணம் நாவலர் பெருமானிடம் தோன்றவே இல்லை என்பதைக் கருத்திருத்தல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் கூட தனியனாகவே நின்று செயற்பட்டார். தன் பெயரிலே சபையோ, ஆதீனமோ நிறுவி டவும் அவர் நாட்டங் கொள்ளவில்லை. என்கடன் பணி செய்து கிடப்பதே என்பதே அவர் வகுத்து நடந்த பாதையாகி அமைந்தது எனலாம்.

தேடிச் சோறுநிதந் தின்று – பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்
வாடித் துன்பமிக உழன்று – பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி – கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் – பல
வேடிக்கை மனிதரைப் போலே – நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ

என்று பாரதி முழங்கியதற்கு ஒப்பாய் நாவலர் பெருமானின் செயற்பாடுகள் அனைத்துமே அமைந்திருந்தன என்பதை நாமனைவருமே மனத்தில் பதித்திடல் அவசியாமாகும்.தனக்குச் சரியெனப்பட்டதை யாருக்குமே அஞ்சாமல் செய்து நின்றவர்தான் எங்கள் வரலாற்று நாயகனாகிய ஐந்தாம் குரவர் நாவலர் பெருமான்.பழமைக்குள் மூழ்கிடாமல் தன்காலத்துக்கு எது உகந்ததோ அதனை மனமிருத்தி செயற்பட்டவர் தான் நாவலர் பெருமான். அதேவேளை மரபினையும் மறந்தாரில்லை என்பதும் நோக்கத்தக்கதாகும். நாவலர் காலத்து நிலைமைக்கு ஏற்ப அவரின் சமயச் சிந்தனை , தமிழ் பற்றிய சிந்தனை, கல்வி பற்றிய சிந்தனை , ஒழுக்கம் பற்றிய சிந்தனை யாவுமே அமைந்திருந்தது.

இலக்கணம் , சமயம் , காப்பியங்கள் என்னும் வகையில் நாற்பத்து நான்கு நூற்களைப் பதிப்பித்திருக் கிறார்.இலக்கணம் தொடர்பாகவும் சைவசமயம் தொடர்பாகவும் இருபத்து நான்கு நூல்களை ஆக்கி இரு க்கிறார்.அத்துடன் அமையாது பதினாறு நூல்களுக்கு உரையும் எழுதியிருக்கின்றார். வியப்பாக இருக்கிறத ல்லவா ? இவ்வளவும் யாருக்காகச் செய்தார் ? யாவுமே மண்ணும் மக்களும் பயனுற வேண்டும் என்னும் உயரிய சிந்தனையால் செய்தார் என்பதுதுதான் உண்மையாகும்.இல்லறத்தினுள் புகுந்துவிடாமல் பிரம்சா ரியத்தைக் கடைப்பிடித்து நல்லறமாய் நாவலர் பெருமான் செய்திருக்கிறார் என்பதால் அவர் ஒரு யுகபுருராகவே விளங்குகிறார் எனலாம்.

தமிழ் உரைநடையின் தந்தையாய், தமிழ் மறுமலர்ச்சியின் முன்னோடியாய், சுவடிகளை பதிப்பிப்பதிலும் முன்னோடியாய், மிகவும் சிறந்த தமிழ் வசனநடை வல்லாளராய், சைவசமயத்தின் பெருங்காவலராய் , நல்லைநகர் ஒளிவிளக்காய் நவலர் பெருமான் திகழ்ந்திருக்கிறார். சைவத்தையும், தமிழையும், காத்த தோடு சைவத்துக்கு எவையெவை இன்றியமைதானவோ அவற்றையும் காத்திட வைக்கும் வகையில் நல்லை நகர் நாவலர் பெருமான் தன்னுடைய பாதையினை வகுத்து அதன் வழியில் பயணப்பட்டிருக் கிறார் என்பதை மறுத்துரைத்து விடல் இயலாது. ஐந்தாம் குரவராய் அவரை ஏற்றுவதும் , போற்றுவதும், குரு பூசை நடத்தி அவரை உயர்வாகப் பார்ப்பதும் மிகவும் உகந்த செயலே யாகும்.அவர் தேர்ந்தெடுத்து நடந்த பாதை கார ணமாக அவரை இன்று இலங்கையின் தேசியவீரனாக , தேசியப் பெருமகனாக , அரசாங் கமே அங்கீகரித்து நிற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.முத்திரையில் நாவலர் பெருமான் திருமுகத்தை யாவரும் பார்த்திட வைத்திடும் கைங்கரியமும் இலங்கை அரசினால் ஆகியிருக்கிறது.அனைத்துக்கும் அடிப்படை நாவலர் பெரு மான் நல்வழியைத் தேர்ந்தெடுத்து அதன் வழியில் நடந்ததுதான் என்பதே உண்மையாகும்.

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே – எல்லவரும்
ஏத்து புராண ஆகமங்கள் எங்கே ப்ரசங்கம் எங்கே
ஆத்தன் அறிவு எங்கே அறை.


# குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Paneer & Ghee - 990/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# புனர்வாழ்வு நிலையங்களில் 1084 பேருக்கு தீவிர சிகிச்சை

## நீதி அமைச்சர் வெளியிட்ட தகவல்

'புனர்வாழ்வளித்தல் தொடர்பான சட்டம் அண்மையில் இயற்றப்பட்டுள்ளது. கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் 520 பேரும், சேனபுர மத்திய நிலையத்தில் 471 பேரும், வவுனியா மத்திய நிலையத்தில் 93 பேரும் சிகிச்சை பெற்று வருகிறார்கள்' என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (05)

# 'ஒற்றைத் தந்த' யானை மீது பல தடவை துப்பாக்கிச் சூடு



ஒற்றைத் தந்த யானை மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேசிய நாமல் பூங்காவில் சுற்றித் திரிந்த யானையின் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த யானை தொடர்பில் கல்கிரியாகம வனவிலங்கு பாதுகாப்பு அலுவலக அதிகாரிகள் நிக்கவெரட்டிய வனவிலங்கு கால்நடை வைத்திய பிரிவின் அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியதையடுத்து, வனவிலங்கு கால்நடை வைத்திய பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று யானைக்கு சிகிச்சை அளித்துள்ளது. இந்த சிகிச்சையின்போது யானையின் முன் இடது காலின் கீழ்ப் பகுதி மற்றும் உடலில் பல இடங்களில் துப்பாக்கிச் சூட்டு தடயங்கள் காணப்படுகின்றன என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர். (05)

# தூக்குத் தண்டனைக் கைதிகளாக 7 வெளிநாட்டுவர்கள் சிறையில்

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் 1206 மரண தண்டனை கைதிகள் உள்ளார்கள். இவர்களில் 744 பேருக்கான மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 454 பேர் மேன்முறையீடு செய்துள்ளார்கள். 07 வெளிநாட்டுப் பிரஜைகள் மரண தண்டனை கைதிகளாக உள்ளனர் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது, மரண தண்டனை, ஆயுள் தண்டனை கைதிகள் தொடர்பில் அமைச்சர் சுட்டிக்காட்டியவை வருமாறு -

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் 1206 மரண தண்டனை கைதிகள் உள்ளார்கள். இவர்களில் 744 பேருக்கான மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 454 பேர் மேன்முறையீடு செய்துள்ளார்கள். 07 வெளிநாட்டு பிரஜைகள் மரண தண்டனை கைதிகளாக உள்ளனர்.

சிறைச்சாலைகளில் 346 ஆயுள் தண்டனை கைதிகள் உள்ளனர். இவர்களில் 100 பேர் மேன்முறையீடு செய்துள்ளார்கள்.

அத்துடன் சிறைச்சாலைகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 10784 கைதிகளில் 61.3 சதவீதமானோர் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவித்தார். (05)

# சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்விலீடுபட்ட மூவர் கைது



நுவரெலியா - நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சட்ட விரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பசுவத்த, கொடகம மற்றும் பொகவந்தலாவ பிரதேசத்தை சேர்ந்த 30, 32 மற்றும் 33 வயதுடையவர்கள் ஆவர்.

நோர்வூட் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சோதனையின்போது அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



## டிசெம்பர் 7....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று சொல்லப்படுகின்றது.

அதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இதுவரை இயங்காத பதிவு செய்யப்படாத கிளிநொச்சி வளாக மாணவர் ஒன்றியம் என்ற பெயரில் பீடாதிபதிகளுக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்திலேயே மாவீரர் நாள் நிகழ்வுகளில் பங்குபற்றிய மாணவர்களையும் அந்த நிகழ்வுக்கு அனுமதி வழங்கியதாகக் கூறப்படும் விவசாய பீடாதிபதியையும் உரிய விசாரணைகள் முடிவுறும் வரையும் பல்கலைக்கழகத்திற்குள் நுழையத் தடை விதித்து, இடைநிறுத்தி வைக்குமாறும் இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் இத்தகையை நிகழ்வுகளை கண்டும் காணாமலும் இருந்த பொறியியல் பீட பீடாதிபதி, தொழில்நுட்ப பீட பீடாதிபதி ஆகியோரைப் பதவி விலக வேண்டும் எனவும் வலியுறுத்தியும் மேலும் சில விடயங்களை முன்வைத்தும் டிசெம்பர் 7 மறியல் போராட்டத்தில் ஏ9 வீதியை முடக்கி ஈடுபடவுள்ளதாகவும் அந்தக் கடித்த்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமைக்குள் மாவீரர் நாள் நிகழ்வுகளில் ஈடுபட்ட மாணவர்களுக்கும், விவசாய பீடாதிபதிக்கும் தற்காலிகத் தடை விதித்து, விசாரணைகளைத் தொடக்கவேண்டும் எனவும் நாளைமறுதினத்திற்குள் தமக்குச் சாதகமான பதில் வழங்காதுவிடின் கிளிநொச்சி பொலிஸாரின் உதவியுடன் நீதிமன்றக் கட்டளையை ஒன்றைப் பெற்று ஊடகங்களுக்கு அறிவிக்கப்பட்டு டிசெம்பர் 7 போராட்டம் நடத்தப்படும் என்றும் அந்த அநாமதேய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிவியல் நகரில் அமைந்துள்ள கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள் மற்றும் பயங்கரவாதத்தை மீளுருவாக்கம் செய்யும் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் தாம் கலந்துரையாடி இருக்கின்றனர் எனவும், வழக்குகளில் முன்னிலையாகி தமக்குத் தேவையான சட்ட ஒத்துழைப்பை வழங்குவதற்குச் சட்டத்தரணிகள் சம்மதித்திருக்கின்றனர் எனவும், கொழும்பு உட்பட இலங்கையின் ஏனைய நகரங்களில் இது தொடர்பில் கண்டண ஆர்ப்பாட்டங்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாணவர்களின் உரிமைகள் மறுக்கப்படுவது குறித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சங்கங்களின் சம்மேளனத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அதிவலு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வனஉயிரிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த கொம்பன் யானைகள் இரண்டும் விவசாயி ஒருவரின் காணியிலேயே உயிரிழந்து கிடக்கின்றன என்று திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

மின்சாரத்தால் தாக்கப்பட்டு காயமடைந்திருந்த 'வாசல' என்று அழைக்கப்படுகின்ற கொம்பன் யானை நேற்று அதிகாலை உயிரிழந்தது என்றும், 'வலகம்பா' என்று அழைக்கப்படுகின்ற மற்றைய கொம்பன் யானை ஒரு வாரத்துக்கு முன்பே உயிரிழந்துள்ளதாகவும் வனஉயிரிகள் திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

'வாசல' யானைக்கு 35 வயது இருக்கலாம் எனவும் 'வலகம்பா' யானைக்கு 40 வயது இருக்கலாம் எனவும் அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

அதிக வலு கொண்ட மின்சார வேலியைப் பொருத்தியமையே இக்கொம்பன் யானைகள் இரண்டும் உயிரிழந்தமைக்கான காரணம் என்றும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# பஸில், கோட்டாபயவின் குடியுரிமையை நீக்க இரு கால்களையும் உயர்த்தி ஆதரவளிப்பேன்

## டிலான் பெரேரா பகிரங்கம்



பொருளாதாரப் படுகொலையாளிகளை உயர்நீதிமன்றம் அடையாளப்படுத்தியுள்ளது.முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் வின் குடியுரிமையை இரத்து செய்யும் கீழ்த்தரமான யோசனைக்கு ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டேன். ஏனெனில் அவர் நாட்டுக்குச் சேவையாற்றியுள்ளார். பஸில்,கோட்டாபய உட்பட ஏனையோரது குடியுரிமையை நீக்கும் யோசனைக்கு இரு கைகள் அல்ல இரு கால்களையும் உயர்த்தி ஆதரவு வழங்குவேன்.

இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதாரப் படுகொலையாளிகள் யார் என்பதை உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. இந்த தீர்ப்பு வரலாற்று சிறப்பு மிக்கது. பொருளாதார ரீதியில் எடுத்த தவறான தீர்மானங்களால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது என்பதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தத் தீர்ப்பைக் கொண்டு ஒரு தரப்பினர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடியுரிமையை இரத்து செய்யும் யோசனையை கொண்டு வந்தால் அதற்கு ஒருபோதும் ஆதரவு வழங்க மாட்டேன்.அந்த கீழ்த்தரமான செயலுக்குத் துணை செல்லமாட்டேன், ஏனெனில் மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டுக்கு சேவை செய்துள்ளார்.

நான் அவர் பக்கம் இனி செல்லப்போவதில்லை.அவருக்கும் எனக்கும் தற்போது எவ்வித தொடர்பும் இல்லை.ஆனால் அவர் மீதான கௌரவம் இன்றும் உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இன்றைய நிலைக்கு நாங்கள் யாரும் பொறுப்பல்லர், அவரது குடும்ப உறுப்பினர்களே அவரை இந்த நிலைக் குத் தள்ளியுள்ளார்கள்.

பொருளாதாரப் படுகொலையாளர்கள் என அறிவிக்கப்பட்டுள்ள பஷில் ராஜபக் ஷ, கோட்டாபய ராஜபக்ஷ உட்பட ஏனைய தரப்பினரது குடியுரிமையை பறிக்கும் யோசனை கொண்டு வந்தால் அதற்கு இரு கைகள் அல்ல இரு கால்களையும் உயர்த்தி ஆதரவு வழங்குவேன்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கிரிக்கெட் பற்றி காலையிலும் பேசுகிறார், மாலையிலும் பேசுகிறார். முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு சார்பாக பேசுகிறார். அது அவரது தனிப்பட்ட விருப்பம்.

கிரிக்கெட் விவகாரத்தில் அவசரப்பட வேண்டாம். அவ்வாறு செயற்பட்டால் பாரிய நெருக்கடிகள் ஏற்படும் என்று நான் கடந்த ஒகஸ்ட் மாதம் சபையில் குறிப்பிட்டேன். அதுவே தற்போது இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் ஆண்டு முதல் காலாண்டு பகுதிக்குள் டி20 போட்டி இடம்பெறவுள்ளது. அதற்கு முன்னர் கிரிக்கெட் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள தேர்தல் என்ற விளையாட்டில் மக்கள் விளையாடுவார்கள். அதற்கான வாய்ப்பை நாம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அதற்கு ஆளும் மற்றும் எதிர்தரப்பினர் தயாராக வேண்டும். காஸாவில் போர் குற்றங்கள் இடம் பெறுகின்றன.அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள். இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சர்வதேச போர் சட்டங்களை மீறுகிறார். பலஸ்தீனர்களுக்கு ஆதரவு தெரிவித்து நான் குரல் கொடுப்பேன். பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் சால்வையை சபையில் அணிவேன். - என்றார். (05)

# தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான மூலதனத்தை 2 வீத சலுகை வட்டியின் கீழ் பெற்றுக்கொடுக்க ஏற்பாடு

## பிரசன்ன ரணவீர தெரிவிப்பு



தற்கால தலைமுறையை புதிய உலகிற்கு பொருத்தமான தொழில் முயற்சியாளர்களாக உருவாக்குவதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நோக்கமாகும் என சிறு மற்றும் மத்தியதர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

வரலாற்றில் முதன் முறையாக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து தொழில் முயற்சியாளர்களுக்காக 30 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்திருப்பதாகவும், தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான மூலதனத்தை 2 வீத சலுகை வட்டியின் கீழ் பெற்றுக்கொடுக்க எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சிறு மற்றும் மத்திய தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் -

நாட்டின் 2.8 வீத தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பொறுப்பு எம்மைச் சார்ந்துள்ளது.

2024-2028 வரையான காலப்பகுதியில் தொழில் முயற்சியாளர்களின் அளவை 10 வீதம் ஆக உயர்த்துவதே எமது இலக்காகும். ஒவ்வொரு துறைகளின் கீழும் காணப்படும் சிறு மற்றும் மத்திய தரத்திலான துறைகளைப் பலப்படுத்தும் பணிகளை ஆரம்பித்துள்ளோம்.

அதற்காக அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களை ஒன்றிணைத்து பல வேலைத்திட்டங்களையும் ஆரம்பித்துள்ளோம்.

அதேபோல் சாதாரண தர பரீட்சையின் பின்னர் இரண்டு லட்சத்திற்கும் அதிகமானோர் தொழில் சந்தைக்குள் நுழைகிறார்கள். இருப்பினும் அவர்களுக்கான வாய்ப்பு தொழில் சந்தையில் கிடைப்பதில்லை.

அதனால் அவர்களையும் தொழில் முயற்சியாளர்களாக மாற்றுவதே எமது நோக்கமாகும். ஒட்டோவுடன் வீதியிலிறங்கும் சமுதாயத்தை அதிலிருந்து மீட்டெடுத்து உரிய தெரிவையும் பயிற்சிகளையும் வழங்குவதே எமது நோக்கமாகும்.வரலாற்றில் முதன் முறையாக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து சிறிய கடன் முன்மொழிவுகளின் கீழ் 30 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் கீழ் தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான மூலதனத்தை 2 வீத சலுகை வட்டியின் கீழ் பெற்றுக்கொடுக்க எதிர்பார்ப்பதோடு, அவர்களை புதிய உலகிற்கு பொருத்தமான தலைமுறையாக மாற்றுவதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினதும் எம்முடையதும் நோக்கமாகும்.

அதேபோல், உலகச் சந்தையில் 2024-2025 ஆண்டுக்காக விடுவிக்கப்படவுள்ள 789 பில்லியனிலிருந்து ஒரு வீதம் பெற்றுக்கொள்ள முடியும் என்றாலும் அது நாட்டுக்கு கிடைக்கும் மிகப்பெரிய வெற்றியாகும். - என்று தெரிவித்தார்.(05)

# வெளிநாட்டுச் சிகரெட்டு வகைகளுடன் அம்பலாந்தோட்டையில் ஒருவர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட்டுகளுடன் சந்தேக நபர் ஒருவரை விசேட அதிரடிப்படை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினரால் அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் அம்பலாந்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடமிருந்து சட்ட விரோதமான முறையில் சுங்க வரியின்றி இறக்குமதி செய்யப்பட்ட 4000 வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக அம்பலாந்தோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# விசாரணைக்குச் சென்ற மூன்று பொலிஸாருக்கு குளவிக்கொட்டு

கண்டி - கம்பளை பிரதேசத்தில் தற்கொலை சம்பவம் தொடர்பான விசாரணைக்காக சென்ற பெண் பொலிஸ் உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகி காயமடைந்துள் ளனர்.

காயமடைந்த மூவரும் கலஹா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் தெல்தோட்டை பிரதேசத்தில் 43 வயது இராணுவ சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தொடர்பான விசாரணை ஒன்றுக்கு சென்றிருந்தபோதே குளவிக் கொட்டுத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# இலங்கையில் தமிழர்கள் கைது குறித்து அமெ. காங்கிரஸ் உறுப்பினர்கள் கவலை

தமிழர்கள் அமைதியான முறையில் மேற்கொண்ட நினைவுகூரலிற்காக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இலங்கையின் வடக்குகிழக்கில் அவர்கள் கைதுசெய்யப்பட்டமை குறித்தும் தமி;ழ் மக்கள் நினைவுகூரலை முன்னெடுப்பதை தடுப்பதற்கு குழப்புவதற்கு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளதாக அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் பில்ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்களினதும் சிவில் மனித உரிமைகளை நிலைநாட்டுமாறு நான் இலங்கை அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை இலங்கையின் வடக்குகிழக்கில் தங்களுடைய அமைதியான நினைவுகூரல்களின் போது தமிழர்கள் கைதுசெய்யப்பட்டமை குறித்து ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளதாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ராஜா கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த கைதுகள் தமிழர்களின் நினைவுகூறல்களை தடுக்க முயலும் இலங்கை பொலிஸாரின் வரலாற்றின் தொடர்ச்சியே என அவர் தெரிவித்துள்ளார். (05)

# பலஸ்தீனுக்கு ஆதரவளிக்கும் வகையில் சபைக்கு அந்த நாட்டு சால்வை அணிந்துவந்த எம்.பிக்கள்

பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் முஸ்லிம் எம்.பிக்கள் இலங்கை பலஸ்தீன் நட்புறவு சால்வை அணிந்து சபைக்கு வந்திருந்தனர்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் நீதி அமைச்சுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதம் இடம்பெற்றது.

இதன்பாஹிது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தேசிய மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா ஆகியோர் பலஸ்தீன் மக்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் இலங்கை பலஸ்தீன் நட்புறவு சால்வை அணிந்திருந்தனர்.

அத்துடன் விவாதத்தில் கலந்துகொண்டு ரவூப் ஹக்கீம் குறிப்பிடுகையில் -

பலஸ்தீன் மக்களுக்கு எமது ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் இந்த சால்வையை அணிந்திருக்கிறோம். அங்கு யுத்த நிறுத்தம் இடம்பெறும் வரைக்கும் எமது ஆதரவை வெளிப்படுத்தி வருவோம். - என்றார்.

ரிஷாத் பதியுதீன் குறிப்பிடுகையில் -

இஸ்ரேல் அரசாங்கம் காஸா மீது மேற்கொண்டு வரும் மிருகத்தனமான செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். அதேநேரம் இலங்கையில் இருந்து இஸ்ரேலுக்குத் தொழிலாளர்களை அனுப்பி, அரபு நாடுகளின் வெறுப்பை இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொள்ளக்கூடாது. அரபு நாடுகள் எப்போதும் எமக்கு உதவி வருகின்றதை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது. - என்றார்.

அத்துடன் எதிர்க்கட்சி உறுப்பினர் திலான் பெரேராவும் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது பலஸ்தீன் ஆதரவு சால்வை அணிந்திருந்தார். யுத்த நிறுத்தம் இடம்பெறும் வரை இந்த சால்வையை அணிந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். அதேநேரம் அவர் வெள்ளிக்கிழமையும் இந்த சால்வை அணிந்து வந்து, இஸ்ரேலுக்கு இலங்கை தொழிலாளர்களை அனுப்பக்கூடாது என்ற பிரேரணை ஒன்றையும் முன்வைத்தார்.

மேலும், விவாதத்தில் கலந்துகொண்டிருந்த அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வரும் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ், சபையில் இருந்த அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் பலஸ்தீன் மக்கள் தொடர்பில் எதுவும் தெரிவிக்கவும் இல்லை. பலஸ்தீன மக்களுக்கு ஆதரவளிக்கும் வகையிலான சால்வை அணிந்திருக்கவும் இல்லை.

(05)

# ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த மாணவர் நீரில் மூழ்கிச் சாவு

*ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த பாடசாலை மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை காலை நாரம்மல, மெட்டியகனே மஹாவெள பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*சனிக்கிழமை காலை மூன்று மாணவர்கள் ஆற்றுக்கு நீராடச் சென்றுள்ளனர். அவ்வேளை அவர்களில் ஒரு மாணவர் நீரில் மூழ்கிய நிலையில், அங்கிருந்த சிலர் அவரை மீட்டு தம்பதெனிய வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.*

*அப்போது மாணவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.*

*உயிரிழந்த மாணவர் மாரவிட, தம்பதெனிய பகுதியை சேர்ந்தவர் ஆவார்.*

*(05)*


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# தங்கம் கடத்திய எனது கட்சி எம்.பியை மூன்று மாதங்களுக்காவது நிறுத்துக

## ரிஷாத் பதியுதீன் கோரிக்கை



நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி தங்கம் கடத்திய எனது கட்சி எம்.பியை 3 மாதங்களுக்காவது நாடாளுமன்றத்தில் இருந்து இடைநிறுத்த வேண்டும். அது தொடர்பில் சட்டமா அதிபர் கொடுக்கின்ற அறிக்கை இந்த 225 எம்.பிக்களையும் திருடர்கள், மோசமானவர்கள் என சொல்கின்ற மக்களை இன்னும் ஆத்திரப்படுத்துவதாக அமையக்கூடாது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் நீதி அமைச்சுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

இந்த நாடாளுமன்றத்தில் ஒருவர் தங்கம், செல்போன்களை கடத்தி கட்டுநாயக்க விமானநிலைய வி.ஐ.பி. வழியூடாக கொண்டு வந்த மிக மோசமான செயலை செய்த வரலாறு இந்த நாட்டில் உள்ளது. அவர் ஓர் இஸ்லாமியன் என்ற அடிப்படையில் நான் வேதனையும் கவலையும் மன வருத்தமும் அடைகின்றேன்.

225 எம்.பிக்களும் எமக்கு வேண்டாம். நீங்கள் தொலைந்து போங்கள், நாடாளுமன்றத்திற்கு குண்டு போடுங்கள் என்று நாட்டு மக்கள் கோம் எழுப்பும் அளவுக்கு மக்களுக்கு எம்.பி.க்கள் மீது கோபம், வெறுப்பு வந்ததை நீங்கள் அறிவீர்கள். கோட்டாபய துரத்தப்பட்டார். அதிர்ஷ்டவசமாக இந்த 225 எம்.பி.க்களும் துரத்தப்படாமல் இருக்கின்றோம்.

இந்த தங்கம் கடத்தல் தொடர்பாக சிறப்புரிமைக்குழுவுக்கு கொண்டு போகப்பட்டது. அவர் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர். இவ்வாறானவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. ஒரு மாதம் சபை நடவடிக்கைகளுக்கு தடை போடுவதா அல்லது 2, 3 மாதங்களுக்கு தடை விதிப்பதா என்று பேசப்பட்டபோது கருத்து வேறுபாடு ஏற்பட்டு கடைசியாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அது அனுப்பப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் சட்டமா அதிபர் அது தொடர்பிலான அறிக்கையை கொடுக்க இருக்கிறார். சட்டமா அதிபர் கொடுக்கின்ற அறிக்கை ஒரு வரலாற்று நிகழ்வாக மாற வேண்டும். இந்த 225 எம்.பிக்களையும் திருடர்கள், மோசமானவர்கள் என சொல்லுகின்ற மக்கள் இன்னும் ஆத்திரப்படுகின்ற தீர்ப்பாக அது அமையக்கூடாது. எனவே இந்த விடயத்தில் சட்ட மா அதிபர் திணைக்களமும் நீதி அமைச்சும் கவனம் செலுத்த வேண்டும்.

அந்த எம்.பி. 3 மாதங்களுக்கு சபையிலிருந்து நிறுத்தப்படுவதற்கான தீர்ப்பை எழுதி அனுப்ப வேண்டும். அவ்வாறு தீர்ப்பு வருகின்றபோதுதான் இந்த நாட்டுக்கு நல்லது செய்கின்ற நாடாளுமன்றமாக இது அமையும்.

அதேவேளை அரசமைப்பின்படி, ஒரு கட்சியிலிருந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை நீக்கினால் அவர் ஒரு மாத காலத்துக்குள் உயர் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டும். அங்கு சென்று மனு செய்கின்ற தினத்திலிருந்து 2 மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்க வேண்டும். ஆனால், 2 மாதங்களில் தீர்ப்பு எழுத வேண்டிய நீதிபதிகள் 5 மாதங்களுக்கும் மேலாகத் தீர்ப்பு எழுதாமல் இருக்கின்றனர்.

இந்த நாடாளுமன்றம் சட்டத்தை உருவாக்குகின்றது. அரசலமைப்பை சாதாரண பொதுமகன் மீறினால் தண்டனை வழங்குகின்றீர்கள். ஓர் உயர் நீதிமன்ற நீதிபதி இவ்வாறான அரசமைப்பை மீறி செயற்படுவது எந்த வகையில் நியாயம்? எனவே இது தொடர்பில் சட்டமா அதிபருடன் பேசி கிடப்பில் கிடைக்கும் வழக்கிற்கு நேர்மையான தீர்ப்பை எழுதச் சொல்லுங்கள். நீதிபதிகள் அரசியலுக்கு, கட்சிகளுக்கு பின்னால் செல்ல முடியாது. நேர்மையில்லாத நீதிபதிகளின் பரம்பரை சாபமடைந்ததை நாம் கண்டிருக்கின்றோம். - என்றார். (05)

# இஸ்ரேல் போரை நிறுத்த உலக நாடுகள் முன்வருக

## ரவூப் ஹக்கீம் சபையில் வலியுறுத்தல்

உலகில் எந்த நாட்டிலும் இடம் பெறாத அளவுக்கு இஸ்ரேல் யுத்தக் குற்றத்தை மேற்கொண்டு வருகிறது. ஆனால் அதனை தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேச நாடுகளுக்கு முடியாமல் போயிருக்கிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தில் நீதி அமைச்சுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

பலஸ்தீன் காஸா மீது இஸ்ரேல் யுத்த நிறுத்தத்துக்கு பின்னர் மீண்டும் தாக்குதலை ஆரம்பித்திருக்கிறது. யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையில் 171 நாடுகள் பிரகடனம் நிறைவேற்றிய போதும் இஸ்ரேல் எதனையும் கண்டுகொள்ளாது செயற்பட்டு வருகிறது. அங்கு சிறுவர்கள், பெண்கள், ஊடகவியலாளர்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 150 ஐக்கிய நாடுகளின் பணியாளர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். யுத்தம் ஒன்றில் இவ்வாறு ஐக்கிய நாடுகளின் ஊழியர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றமை வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். ஆனால், ஐக்கிய நாடுகள் சபையோ மேற்கத்திய நாடுகளோ இது தொடர்பாக மௌனம் காத்து வருவதையே காணமுடிகிறது.



மேலும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மெழுகுவர்த்தியை கையில் ஏந்திய வண்ணம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு அரசாங்கம் எவ்வாறு வடக்கில் நடவடிக்கை எடுக்கப்போகிறது எனத் தெரிவித்திருந்தார். ஆனால் இதனையும் விட மோசமான சம்பவம் இஸ்ரேல் அரசாங்கம் பலஸ்தீனில் மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பில் அவர் என்ன சொல்லப்போகிறார் எனக் கேட்கிறோம்.

எனவே, இஸ்ரேல் மிகவும் மோசமான யுத்தக்குற்றங்களை மேற்கொண்டு வருகிறது. இஸ்ரேலில் இடம்பெறுவது யுத்தக்குற்றம் இல்லை என்றால் உலகில் எந்த நாட்டிலும் யுத்தக்குற்றம் இடம்பெறுவதில்லை. அதனால் இஸ்ரேல் யுத்தத்தை நிறுத்த உலக நாடுகள் முன்வர வேண்டும். அதற்காக நாங்களும் தொடர்ந்து அழுத்தம் கொடுக்க வேண்டும். அந்த வகையிலேயே ஒற்றுமையை வலியுறுத்தி பலஸ்தீனுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் யுத்த நிறுத்தம் இடம்பெறும் வரை பலஸ்தீன் ஆதரவு சால்வையை தொடர்ந்து அணிந்திருப்போம். - என்றார். (05)

# நாணய நிதியத்தின் 330 மில்லியன் டொலர் இரு வாரங்களுக்குள் இலங்கைக்கு கிட்டும்

## நிதி அமைச்சு தகவல்

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தவணையான 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இரு வாரங்களுக்குள் இலங்கைக்கு கிடைக்கப் பெறவுள்ளதுடன், உலக வங்கியுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகளுக்கு அமைவாக, மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இம்மாதத்தில் இலங்கைக்கு கிடைக்கப் பெறவுள்ளன என நிதி அமைச்சு தெரிவித்தது.

கடன் மீள் செலுத்தலுக்கான நிவாரண காலத்தை இலங்கைக்கு வழங்கியுள்ள சர்வதேச மற்றும் தனியார் கடன் வழங்குநர்கள் கடனுக்கான வட்டி தொகையில் குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் நிதி அமைச்சு மேலும் குறிப்பிட்டது.

இது குறித்து நிதி அமைச்சின் பேச்சாளர் மேலும் கூறுகையில் -

தேசிய மற்றும் சர்வதேச கடன் மறுசீரமைப்புகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இம்மாதத்தில் 780 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு கிடைக்கப்பெறவுள்ளன. சர்வதேச மற்றும் தனியார் கடன் வழங்குநர்கள் இலங்கைக்கு கடனை மீள் செலுத்த நிவாரண காலத்தை வழங்கவும் இணங்கியுள்ளனர்.

மேலும், கடன் மற்றும் வட்டியை மீள்செலுத்த நிவாரண காலமும் கடன் வட்டியில் குறிப்பிட்ட தொகையைத் தள்ளுபடி செய்வதற்கும் சர்வதேச கடன் வழங்குநர்கள் உறுதியளித்துள்ளனர். இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தவணையான 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இருவாரங்களுக்குள் இலங்கைக்கு கிடைக்கப்பெறவுள்ளது. மறுபுறம் உலக வங்கியுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகளுக்கு அமைவாக மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இலங்கைக்கு இம்மாதத்தில் கிடைக்கப்பெறும்.

இதன் பிரகாரம், இந்த டிசெம்பர் மாதத்தில் 780 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (257 பில்லியன் ரூபா) இலங்கைக்கு கிடைக்கும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைகளுக்கு அமைவாக இந்த நிதிகளை பெற்றுக்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளார்.

இதேவேளை, நிதி இராஜாங்க அமைச்சர்களான செஹான் சேமசிங்க மற்றும் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய உள்ளிட்ட மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றனர் என்று கூறினார். (05)

# ஆதிவாசி சமூகத்தையும் நுண்கடன் ஆக்கிரமிப்பு

## நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

*நுண்கடன் திட்டத்தின் கொடுமைகளுக்கு ஆதிவாசி சமூகத்தினரும் தற்போது அகப்பட்டுள்ளார்கள். மத்திய வங்கியால் மாத்திரமே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.*

*நுண்கடன் திட்டங்களைக் கண்காணிக்கும் வகையில் அதிகார சபையை ஸ்தாபிக்கும் சட்டமூலத்தை இன்னும் ஓரிரு மாதங்களில் சமர்ப்பிப்பேன் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுகளுக்கான செலவீனத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய எதிரணியின் சுயாதீன உறுப்பினர் டிலான் பெரேரா நுண்கடன் திட்டம் தொடர்பில் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.*

*அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -*

*நுண்கடன் திட்டங்களால் நூற்றுக் கணக்கில் அல்ல தற்போது மில்லியன் கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.*

*இது பாரதூரமான பிரச்சினையாகக் காணப்படுகிறது. மத்திய வங்கியால் மாத்திரம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். தலையிட முடியும். ஆனால் சட்ட சிக்கல்களால் பல பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன. ஆதிவாசி சமூகத்தினரும் தற்போது நுண்கடன் திட்டத்தின் கொடுமைகளுக்கு அகப்பட்டுள்ளார்கள். ஆகவே உடனடியாக ஒரு தீர்வு காணவேண்டும். ஆகவே நுண்கடன் நிதி நிறுவனங்களைக் கண்காணிக்கும் வகையில் அதிகார சபை ஒன்றை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலத்தை எதிர்வரும் ஓரிரு மாதங்களில் சபைக்கு சமர்ப்பிப்பேன். அதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். - என்றார். (05)*

# போலி விசாவில் இத்தாலி செல்லமுயன்றோர் கைது

போலி விசாவைப் பயன்படுத்தி இத்தாலிக்குச் செல்ல முயன்ற இரண்டு இலங்கைப் பெண்கள் கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய பெண். மற்றைய யுவதி யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 26 வயதுடையவராவார்.

இவர்கள் இருவரும் சமர்ப்பித்த ஆவணங்களில் சந்தேகமடைந்த கட்டார் ஏர்வேஸ் அதிகாரிகள், இருவரையும் விமான நிலைய குடிவரவு மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு நடத்தப்பட்ட விசாரணையில், இந்த இத்தாலிய விசாக்கள் போலியான தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவை என்பது தெரியவந்தது. (05)


காலைக்கதிர் Kalaikkathir



# மொசாட் உருவாக்கிய 'சால்ட் ஃபிஷ்' கொலைப் படை:

## 30 ஆண்டின் பின் வெளியான யாசர் அராஃபத் படுகொலை உண்மை;







**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

பல ஆண்டுகளாக இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிய பலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவரான யாசர் அராஃபத் பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தின் சின்னமாக என்றும் இருந்தவர். அவரது இறப்புத் தொடர்பில் 30 ஆண்டுகளுக்குப் பின் பல உண்மைகள் வெளிவந்துள்ளன.

அராஃபத்தை கொல்ல இஸ்ரேல் அமைத்த படை பற்றியும், பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராஃபத்தை கொல்வதற்கு இஸ்ரேல் எந்தவொரு எல்லைக்கும் செல்லத் தயாராக இருந்தது என்கிற உண்மையையும் யாசர் அரஃபாத்தை சந்தித்த முதல் இஸ்ரேலியர் யூரி அப்னெரி தெரிவித்துள்ளார்.

### அராஃபத்தை கொல்ல இஸ்ரேல் அமைத்த படை

பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர் யாசர் அராஃபத் 2004ஆம் ஆண்டு கதிரியக்க நச்சின் மூலம் படுகொலை செய்யப்பட்டிருப்பது இப்போது உறுதியாகியிருக்கிறது. சுமார் மூன்று தசாப்தங்கள் கழித்து பல உண்மைகள் வெளிவந்துள்ளன.

இஸ்ரேலிய கொமாண்டோக்கள் தங்கள் நாட்டின் சொந்த குடிமகனும், பத்திரிகையாளருமான அப்னெரி, பாலஸ்தீனத் தலைவரை 1982 சந்திக்கச் சென்றபோது பின்தொடர்ந்து வந்தனர் என்றும், அவரை இலக்கு வைத்துக் கொல்லத் தயாராக இருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

அரசியல் எதிரிகளை கொலை செய்வது, மக்கள் மீது குண்டு வீசுவது, குழந்தைகளுக்கு மருந்துகள் மறுப்பது போன்ற பயங்கரவாத செயல்களில் உலக அளவில் முன்னணியில் இருக்கும் நாடுகளில் இஸ்ரேலும் ஒன்று.

### அராஃபத்தை கொல்ல 'சால்ட் ஃபிஷ்' கொமாண்டோ

பிரிவுலெபனானில் இருந்து பாலஸ்தீன விடுதலை அமைப்பை (பி.எல்.ஓ)வை அகற்றுவதற்காக 1982இல் இஸ்ரேல் அங்கு நுழைந்தது. இது தொடர்பாக இஸ்ரேல் பத்திரிகையாளர் ரொனென் பர்க்மென் இஸ்ரேலிய அரசியல் படுகொலைகள் தொடர்பான ஒரு புத்தகம் எழுதியிருந்தார்.

அதில் பாலத்தீன விடுதலை அமைப்பின் தலைவரைக் கொல்ல மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பற்றியும் அவர் எழுதியிருந்தார்.

ரொனென் பர்க்மன் நூற்றுக் கணக்கானவர்களைப் பேட்டி கண்டார். இதில் நிறைய சர்ச்சைகளும் எழுந்தன. அவரது ஆராய்ச்சியின்போது, அவர் தேசத்துரோகம் செய்கிறார் என்று இராணுவத் தலைவரால் குற்றம் சாட்டப்பட்டார்.

இஸ்ரேல் 1982 இல் எகிப்தின் பெய்ரூட்டை ஆக்கிரமித்தது. அராஃபத்தை கொல்வதற்காக, 'சால்ட் ஃபிஷ்' என்ற சிறப்பு கொமாண்டோ பிரிவு இதற்காகவே நியமிக்கப்பட்டது என பர்க்மன் குறிப்பிட்டுள்ளார்.

### பாலஸ்தீன போராட்ட சின்னம் யாசர் அராஃபத்

பாலஸ்தீன நிலங்களை ஆக்கிரமித்து 1948ஆம் ஆண்டு உருவாக்கிய யூதர்களுக்கான இஸ்ரேல் நாடு, தொடர்ந்து தனது ஆக்கிரமிப்புகளை விரிவுபடுத்தி, லட்சக்கணக்கான பாலஸ்தீன மக்களைச் சொந்த மண்ணிலேயே அகதிகளாக, சிறைக் கைதிகளாக நடத்தி வருகிறது. நீண்ட போராட்டங்களின் பின்னர் 1994 இல் யாசர் அராஃபத்தும், பிஎல்ஓ அமைப்பும் இஸ்ரேலுடன் சமரசம் செய்துகொண்டன.

இருப்பினும் யாசர் அராஃபத்தை கொன்றே ஆக வேண்டும் என்பதில் இஸ்ரேல் பின்வாங்கவில்லை. 2004ஆம் ஆண்டு பாலஸ்தீனிய பகுதியான ரமலானில் இருந்த யாசர் அராஃபத்தின் குடியிருப்பை ஆயுதப் படைகளால் சூழ்ந்து, அவரை சிறைப் படுத்தி, உணவு, தண்ணீரைக்கூடக் கட்டுப்படுத்தி வந்தது இஸ்ரேல்.

ஆரோக்கியமாக இருந்த அராஃபத் அந்த ஆண்டு ஒக்டோபர் 12ஆம் நாள் திடீரென கடும் நோய்வாய்ப்பட்டார். இரண்டு வாரங்களுக்குப் பிறகு பாரிசில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர், நவம்பர் 11 தனது 75ஆவது வயதில் உயிரிழந்தார். ஒரு மாதத்துக்குள் உடல் சுருங்கி, தோல் கறுத்து, உயிரிழந்தார்.

### அரசியல் படுகொலை என மனைவி தகவல்

யாசர் அராபத்தின் இறப்பு அரசியல் படுகொலை தான் என்றும், அவர் விம் வைத்துக் கொல்லப் பட்டதற்கு அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் உள்ளன என்றும் அவரது



மனைவி சுஹா அராபத் பேட்டி அளித்துள்ளார். 2004இல் அவரது மனைவி கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவரது உடல் உடல்கூறுப் பரிசோதனை செய்யப்படாமல் அடக்கம் செய்யப்பட்டது. அராஃபத்தைக் கொன்றது இஸ்ரேல்தான் என்று பாலஸ்தீன மக்கள் உறுதியாக நம்பினர். ஆனால், அராஃபத்திற்குப் பிறகு பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவரான முகமது அப்பாஸ், உடற்கூறுப் பரிசோதனைகூடச் செய்யாமல் உடலைப் புதைக்க ஏற்பாடு செய்தார்.

அராஃபத்துக்கு சிகிச்சை அளித்த பிரெஞ்சு மருத்துவமனையின் மருத்துவர்கள் அவரது நோய் தொடர்பாக எந்தத் தகவல்களையும் வெளியிட மறுத்துவிட்டனர். அவை இராணுவ இரகசியங்கள் என வகைப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தனர்.

மனைவி சுகா அராஃபத்திடம் கொடுக்கப்பட்டிருந்த அராஃபத்தின் உடைகள், பல் தேய்க்கும் பிரஷ் ஆகியவற்றைப் பெற்று சுவிட்சர்லாந்தில் உள்ள லசானே பல்கலைக் கழகம் ஆய்வு செய்தது. அவற்றில் இருந்து எடுக்கப்பட்ட குருதி, வேர்வை, உமிழ்நீர், சிறுநீர் போன்று திரவங்களின் படிமங்களைச் சோதனை செய்து அவற்றில் நஞ்சுக்களின் தடயம் இருக்கிறதா என்று ஆய்வு செய்யப்பட்டது.

வழக்கமானநஞ்சுகள்எதுவும்கிடைக்காமல் போகவே அரிதான நஞ்சுகளுக்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது அவற்றில் பொலோனியம் 210 என்ற தனிமம் இயற்கையாக இருப்பதை விட 10 மடங்கு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது என 2012ஆம்ஆண்டில்அல்ஜசீராதொலைக்காட்சி தெரிவித்தது.



### பொலோனியம் கதிர்வீச்சு தனிமம்

பொலோனியம்என்பது1898-ஆம்ஆண்டு மேரி கியூரியால் கண்டறியப்பட்ட கதிர்வீச்சு தனிமம் ஆகும். சில ஆண்டுகளுக்குப் பிறகு பொலோனியம்-210 ஆல் பாதிக்கப்பட்ட மேரி கியூரியின்மகள்ஜீன், உயிரிழந்தார். அத்துடன் இஸ்ரேலின் அணு உலை திட்டத்தில் பணி புரியும் இரண்டு ஊழியர்கள் பொலோனிய நச்சினால் கொல்லப்பட்டனர் எனப் பதிவாகியிருக்கிறது.

வல்லரசு நாடுகளைத் தாண்டி யாரும் இவற்றை கைக்கொள்வது கடினம். எனவே, பொலோனியம் நச்சினால் பாதிக்கப்பட்டவர்களின் நோய்க் கூறுகள் பற்றிய தரவுகள் பெருமளவு கிடைப்பதில்லை. இருப்பினும், செய்யப்பட்ட சோதனைகளில் அராஃபத்துக்கு ஏற்பட்ட நோய்க் கூறுகள் கண்டறியப்பட்டன.

### அராஃபத்தின் உடைகளில் பொலோனியம்

அராஃபத்தின் உடைகளில் படிந்திருந்த பொலோனியத்தின் அளவு இயற்கையானது இல்லை எனவும், அணுஉலைகளில் தயாரிக்கப்பட்ட பொலோனியம் அவருக்கு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் தடவியல் நிபுணர்கள் கூறினர். புதைக்கப்பட்ட அராஃபத்தின் உடலைத் தோண்டி எலும்புகளை ஆய்வு செய்து அவற்றில் பொலோனியம் இருப்பது நிரூபிக்கப்பட்டால், அவர் படுகொலை செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்யலாம் என்று அராஃபத்தின் மனைவி கோரிக்கை விடுத்தார்.

### மனைவி சுகா அராஃபத் கோரிக்கை

அராஃபத்தின் உடலை பரிசோதனைக்கு வெளியில் எடுப்பதற்கு ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்ட பாலஸ்தீன விடுதலை அமைப்பு, பின்னர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் நிபுணர்களோடு, ரஷ்யா குழு ஒன்றையும் அழைத்தது.

கல்லறையிலிருந்து எடுக்கப்பட்ட அராஃபத்தின் எலும்பு மாதிரிகள் சுவிட்சர்லாந்து ஆய்வகத்திலும், ரஷ்யாவிலும் பிரான்சிலும் பரிசோதனை செய்யப்பட்டன.

ரஷ்ய ஆய்வகத்தின் சோதனை முடிவுகளை இரகசியமாக பெற்ற அல்ஜசீரா, சோதனைகள் செய்வதில் அரசியல் தலையீடு இருந்ததையும், அறிக்கையில் தரப்பட்டிருக்கும் பொலோனியத்தின் அளவு சாதாரண மனிதர்களிடம் இருக்கும் அளவானது இல்லை என்று அறிக்கை சொல்வதையும் சுட்டிக் காட்டியது.

### சுவிட்சர்லாந்து தடவியல் அறிக்கை

இந்நிலையில், ஸ்விட்சர்லாந்து நாட்டின் தடவியல் அறிக்கை முடிவுகள் குறித்து சுஹா கூறியதாவது, 'எனது கணவர் (யாசர் அராபத்) இயற்கையாக உயிரிழக்கவில்லை.

அவர் போலோனியம் என்ற வித்தால் கொல்லப்பட்டுள்ளார் என்பதற்கான அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. அவரது இறப்பு இயற்கையானது அல்ல. அரசியல் படுகொலைதான் என்ற எனது சந்தேகம் இப்போது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகியுள்ளது.

இந்த படுகொலை தொடர்பாக எந்த நாட்டையும் எந்த தனிநபரையும் நான் குற்றம்சாட்ட விரும்பவில்லை' என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் அரசின் கட்டுப்பாட்டில் பொலோனியம் உற்பத்தியாகும் அணு உலைகள் உள்ளன என்பதையும், இறுதிக் காலத்தில் அராஃபத் இஸ்ரேல் படைகளால் சூழப்பட்டிருந்தார் என்பதையும்வைத்துப்பார்க்கும்போது, தனது நோக்கங்களுக்கு இடையூறாக இருந்த அராஃபத்தை தீர்த்துக் கட்டுவதற்கான இஸ்ரேலின் சதிதான் இந்தப் படுகொலை என்பது நிரூபணமாகிறது. இஸ்ரேலுடனான 'சமாதான' பேச்சு வார்த்தையில், அராஃபத் இஸ்ரேலின் நிலப்பறிப்பு கோரிக்கைகளுக்கு அடிபணிய மறுத்ததும், பாலஸ்தீன விடுதலைக்கான ஆயுதம் தாங்கிய போராட்டத்தை கைவிட மறுத்ததும் இஸ்ரேலின் திட்டங்களுக்கு முட்டுக் கட்டையாக இருந்தன.

### பாலஸ்தீன மக்களின் தலைவர்

பாலஸ்தீன மக்களின் பெருவாரியான ஆதரவை பெற்ற தலைவராக இருந்த அராஃபத் வெளிப்படையாகக் கொல்லப்பட்டால், பெரும் மக்கள் எழுச்சி வெடிக்கும் என்று பயந்த இஸ்ரேல் நய வஞ்சகமாக அவரை கொலை செய்திருக்கிறது. அவரைக் கொலை செய்வதில் உள்வட்டத்தைச் சேர்ந்த துரோகிகளின் பங்களிப்பும் இருந்திருக்கலாம் என்று அல்ஜசீரா குற்றஞ்சாட்டுகிறது. தற்போது இஸ்ரேல் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களையும், இன சுத்திகரிப்பையும் காசாவில் தொடர்ந்து நடத்தி வருகிறது.

காலைக்கதிர் Kalaikkathir

# பாதுகாப்பு உத்தியோகத்தர் கடத்தப்பட்டு களனிப் பல்கலைக்கழகத்தில் தாக்குதல்

## மாணவர் குழு மீது குற்றச்சாட்டு

களனி பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை கடத்திச் சென்று தாக்கியுள்ளார் என கிரிபத்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில்பிலியந்தலைபிரதேசத்தைச்சேர்ந்த ஏ.எஸ்.தேவப்பிரிய (வயது - 42) என்பவரே காயமடைந்துள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களனி பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றும் இவர், சனிக்கிழமை காலை பல்கலைக்கழக மைதானத்தில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் உறங்கிக்கொண்டிருந்தார்.

இதன்போது அங்கு சென்ற மாணவர்கள் குழு ஒன்று அவரை எழுப்பி வெளியே அழைத்துச் சென்று மோட்டார் சைக்கிளில் வலுக்கட்டாயமாக ஏற்றி, பல்கலைக்கழகத்தின் உடல் நலமையத்துக்கு அழைத்துச் சென்று தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் கிரிபத்கொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

(05)

# ஹந்தான மலைக்குச் சென்று வழி தவறியுள்ள ராகம மருத்துவபீட மாணவர்கள் கண்டுபிடிப்பு

ஹந்தான மலைக்குச் சென்று, மோசமான வானிலை காரணமாக வழி தவறிய ராகம மருத்துவ பீட மாணவர்கள் இராணுவம் மற்றும் பொலிஸாரின் கூட்டு நடவடிக்கையின் பின்னர் மீட்கப்பட்டுள்ளனர்.

ஹந்தான மலைக்கு ஏறச் சென்ற ராகம மருத்துவ பீட மாணவர்கள் 180 பேர் சனிக்கிழமை பிற்பகல் காணாமல் போயிருந்த நிலையிலேயே இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

அந்தக் குழுவில் 60 மாணவர்களும் 120 மாணவிகளும் இருந்ததாகக் கூறப்படுகிறது.

கடும்மூடுபனிகாரணமாகமலைத்தொடரில்வழி தவறி இவர்கள் சென்றுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (05)

# யானை - மனித மோதலால் கடந்த ஆண்டு 433 காட்டு யானை உயிரிழந்ததாக தகவல்



சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள்மற்றும் நிலையானவளர்ச்சிக்கானதுறைசார் கண்காணிப்புக் குழுவின் கூற்றுப்படி, மனித - யானை மோதலால் கடந்த ஆண்டு 433 யானைகள் உயிரிழந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

காட்டு யானை - மனித மோதலை தடுக்கும் வகையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தை உடனடியாகநடைமுறைப்படுத்துமாறு குழுவின் தலைவரும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அஜித் மான்னப்பெரும வேண்டுகோள் விடுத்துள்ளார். (05)

# நன்னடத்தை பாடசாலை சிறுவன் சாவு மேற்பார்வையாளரான பெண் கைது

சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை சந்தேகத்தின் பேரில் கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஸ்லாமபாத் பகுதியிலுள்ள பெண்கள், சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் கடந்த மாதம் 17ஆம் திகதி மணியொன்றை திருடிய குற்றச்சாட்டின் பேரில் இந்த சிறுவன் கொக்குவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து நீதிமன்ற வழக்கு விசாரணையின் பின்னர், நீதிவானின் உத்தரவின் பிரகாரம், இந்தக் காப்பகத்தில் பாதுகாப்புக்காக சிறுவன் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மர்மமான முறையில் உயிரிழந்த சிறுவன் மட்டக்களப்பு கொக்குவில் பகுதியை சேர்ந்த 15 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில், இப்பாடசாலையில் சிறுவன் கடந்த புதன்கிழமை (நவ. 29) அதிகாலை 3.30 மணியளவில் உயிரிழந்துள்ளார் எனத் தமக்கு அறிவிக்கப்பட்டதாகவும், சிறுவனின் உடலில்காயத்தழும்புகள்இருப்பதால் தமக்கு மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும் சிறுவனின் பெற்றோர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

அதனையடுத்து,கல்முனைஅஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்ட சிறுவனின் சடலம் அம்பாறைபொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அங்குசட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையின் பிரகாரம், சிறுவனின் உடலில் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட காயங்கள் காணப்படுகின்றன எனவும், உட்காயங்களால் இந்த மரணம் நேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, இச்சம்பவம் தொடர்பில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் பல்வேறு குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான எம்.எல் றபீக் தலைமையிலானபொலிஸ்குழுவினர் குறித்த பாடசாலைக்கு சென்று தொடர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போதே சிறுவனை அன்று தாக்கியதாக சந்தேகத்தின் பேரில் 25 வயது மதிக்கத்தக்க அப்பாடசாலையில் கடமையாற்றும் மேற்பார்வையாளரான பெண் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைதான சந்தேக நபர் சனிக்கிழமை இரவு கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.

இந்நிலையில் சிறுவன் தங்க வைக்கப்பட்டிருந்தகாப்பகத்தில்சம்பவதினத்தன்று இரவு உணவினை உட்கொண்ட பின்னர் பாடசாலை வளாகத்தில் நின்றதாகவும், பின்னர் என்ன நடந்தது எனத் தெரியவில்லை என முன்னுக்குப் பின்னான வாக்குமூலங்களை வழங்கியதைத் தொடர்ந்தேசந்தேகத்தின்பேரில்குறித்த பெண் பொலிஸ் விசாரணைக்காக கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் அன்றிரவு கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தனது மகனின் மரணத்தில் பலவிதமான பொய் குற்றச்சாட்டுகளை பாடசாலையின் நிர்வாகம் முன்வைப்பதாகவும், மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் தாம் வாழ்வதாகவும், எமது பிள்ளைக்கு நடந்ததைப் போல் இனி யாருக்கும் இடம்பெறக்கூடாது என்றும் மகனின் மரணத்தில் ஒரு நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் உயிரிழந்த சிறுவனின் தந்தை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.12.2023இல் வெளியிடப்பெற்றது.